அருட்குரு

முத்துக்குமார சுவாமி

அவர்கள் சரித்திர நூல்

எழுதியவர் :

சுவாமி சுந்தரமகாலிங்கம்

பண்ணிக்கண்டு

1961.

ஓம்.

ஞானசித்தர்
திருவாரூர் வடபாதிமங்கலம்
அருட்குரு முத்துக்குமாரசாமி அவர்கள்

சரித்திர நூல் அட்டவணை

	முன்னுரை	
	சித்தர்களின் பெருமை	
	முருகன் அருள்	
	கணபதி துதி	
	முருகன் துதி	
	திரிபுரை துதி	
	பரமரகசியப்பொருள் துதி	
	குரு துதி	1—2
1	பரதகண்டத்தின் பண்பு	2
2	சோழநாட்டுச் சீர்மை	3
3	திருவாரூர் சிறப்பு	
4	வடபாதிமங்கலம் மாண்பு	4
5	அன்னை தந்தை குலமும் தன்மையும்	
6	தெய்வத்தன்மை திருஅவதாரம்	5
7	பெருமான் பிள்ளைப்பருவம்	
8	அன்னையார் பிரிவும் தந்தையார் வாழ்வும்	6
9	ரெங்கநாதன் ஓதாதுணர்தல்	
10	பால்குடி பாவாவின் தெரிசனக்காட்சி	7
11	ஆடம்பரங்களையகற்றல்	
12	ஞானோபதேசம் பெறல்	
13	ரெங்கநாதன் தவயோகம்	8
14	இறைவன் வெளிப்படுதல்	
15	இறைவன் கட்டளையை மறுத்தல்	
16	இறைவனுக்கினையால் ஏற்பட்ட துன்பம்	
17	பால்குடிபாவா சுட்டதுளை அடைத்தல்	9
18	நேபாள அரசன் மன்னிப்பு	
19	நேபாள அரசனுக்கு இறைவனுக்கினை கூறல்	

20	நேபாள அரசன் அழைத்துச் செல்லல்	
21	தவவேடம் சிவலிங்க பிரதிஷ்டை	10
22	பால்குடிபாவா நேபாளம் வந்தது	
23	முத்துக்குமாரசாமி என திருநாமம்	
24	முத்துக்குமாரசாமி வேலப்பன் அருள்பெறல்	11
25	ஆறுபடை வீடுகள் சென்று அருள்பெறல்	
26	காசிவிஸ்வநாதர் தெரிசனம்	12
27	முத்துக்குமாரசாமி திருவிளையாடல்	
28	பம்பாய் சேட் புத்திரப்பேறு பெற்றது	13
29	பம்பாய் சேட் புத்திரனுடன் காசி செல்லுதல்	
30	பொருள் நயவாமை	14
31	காசியில் முத்துக்குமாரசாமி மடாலயம்	
32	ரிஷிகேசத்தில் பால்குடிபாவா தருமசத்திரம் சட்டவேணுமாய் கட்டளையிடுதல்	15
33	ரிஷிகேசத்தில் தருமசத்திரம்	
34	ரிஷிகேசம் தருமசத்திரம் பார்வையிடுதல்	
35	சீசன் வேணுமெனக் கட்டளையிடுதல்	16
36	சுவாமி விவேகானந்தருக்காக அமெரிக்கா சென்றது	
37	கொல்லிமலை வாசம்	17
38	பொதியை அகத்தியர் அருள்பெறல்	
39	சதுரகிரியில் சீசனிருக்குமிடமறிதல்	18
40	பண்ணிக்குண்டு குமாரசாமியை ஆட்கொண்ட வைபவம்	19
41	தொண்டனுக்கிய வைபவம்	22
42	அருட்குரு உபதேசித்த தன்மை	
43	அருட்குரு எல்லாம் தன்னாலே வந்து சேருமென்றது	23
44	அருட்குருவின் திருநோக்கால் பெற்றநிலை	
45	எல்லாந் தன்னாலே வந்து சேர்ந்த விபரம்	24
	1 சாத்திர கிருபை	
	2 அந்தக்கரண கிருபை	25
	3 ஈசுர கிருபை	27
	4 குரு கிருபை	29
	5 தியாக பில் சுசைட்டி (ப்ரமக்ஞான சபை) தத்துவஞான சபை	32

6 சமரச சுத்தசன்மார்க்க சங்கம் 33
7 தமிழ்நாடு சித்தவைத்திய சங்கம்
8 பாபவிநாசம் தெய்வீக சித்தவைத்திய சங்கம் 34
46 அருட்குரு தெரிசனம் 35
47 அருட்குரு மந்திரம் கொடுத்த விபரம் 36
48 அருட்குரு பரிசோதித்தல்
49 கதிர்காம வேலப்பன் நல்லவன் என்றது 36
50 செல்லப்பெருமாளுக்கு உத்தியோகம்
51 சரபராஜ மாத்திரை வரவழைத்தல் 37
52 மழைபொழியவைத்த மாட்சி 38
53 அங்குமிங்கும் இருந்த அற்புதம்
54 சிலோன் தாளையன் பாவா சந்தேகம் நீக்கியது 39
55 சுந்தரமகாலிங்கம் மறைவாயிருந்த நோய் நீக்கியது 40
56 சங்க நிதியோ பதும நிதியோ
57 புகைப்படம் 41
58 மாராந்தையில் குருவாயின நிலை
59 அருட் தரு சித்தவைத்தியம் செழிப்புற
தொண்டுசெய்யெனக் கட்டளையிடுதல் 42
60 அருட்குருவின் கட்டளையின்படி சித்தவைத்தியத்
தொண்டுகள்
க) லால்குடியில் சித்தவைத்திய யூனியன்
ங) சென்னை மாநாடு நடத்திய தன்மையும் தொண்டும் 43
ச) முன்சிறை சித்தவைத்தியக் கல்லூரியும் தொண்டும் 44
ஞ) மதுரை சித்தவைத்திய சங்கம் மாநாடு
ட) தேவி சித்தவைத்தியசாலை 45
ண) சித்தவைத்தியம் தனிக்கலையே
த) பதிவுசெயற்கமிட்டி நியமனம்
சென்டிரல்போர்டார் அங்கீகாரம் பெற்றது 46
ந) அருட்குருவின் தன்மை திரிபுரை தெரிவித்தல் 47
ப) கோவை மாநாடும் சரபராஜ மாத்திரையின் பெருமையும்
ம) சித்தவைத்தியத்திற்கு தனித்தொகுதி வேண்டுமெனல் 48
ய) சித்தவைத்திய நிலை சித்தர் தெரிவித்தல்
ர) சென்னை மாநாடும் சித்தவைத்தியக் கல்லூரியும்
ல) தாசர்புரம்சித்தவைத்தியக்கல்லூரியில் பணிசெய்தது 49

வ) மதுரை சித்தவைத்தியக் கல்லூரியில் பணிசெய்தது
ழ) தமிழ்நாடு இந்தியமருந்து உற்பத்திக்கம்பெனி மதுரை
ள) திருப்பரங்குன்றம் சித்தவைத்திய வளர்ச்சிநிலையம்
இது ஒரு தெய்வீக ஸ்தாபனம்
ற) தமிழ்நாடு சித்தவைத்திய சங்கம் திருநெல்வேலியில்
மாநாடு 51
ன) திருமலைக்குமாரசாமி சித்தவைத்திய ஆராய்ச்சிமன்றம்
பண்மொழி 52
61 அரசாங்கம் உண்மையுணர்தல் 53
62 ஞானபிட்டையின் பெருமை 54
63 ஞானவிஞ்சை கற்றவர் திறம் 55
சித்து வகுப்பு
64 பிறந்த ஆண்டுவிழா நடந்துவரும் வைபவம் 56
65 அருட்குரு சரித்திர சிரவண பலன்
முடிவுரை

ஓம்.

மு ன் னு ரை


கத்தன் பரங்கிரி சீரலையே ரகங்காண் பலதுன்
றத்தன்தென் சோலைமலை யாவினன் குடியாறு மென்பர்
வித்தென்பதா யென்னுளா தாரமாறும் வெவ்வேறு ருவாம்
பித்தன் சருவகுருவாஞ் சடாக்கரப் பேரொளிக்கே

கதிர்காம வேலப்பன் பால்குடி பாவா அவர்களை அடிமை கொண்டார் அவர்கள் இற்றைக்கு 122 ஆண்டுக்கு முன் முத்துக் குமாரசாமியை வடபாதிமங்கலத்திற்குப்போய் ரிஷிகேசத்திற்குகவுன மார்க்கமாய் அழைத்துச் சென்று தவயோகத்திலிருக்கச் செய்தார் அவர்கள் 80வது வயதளவில் சதுரகிரியிலிருந்து பண்ணிக்குண்டு இல்லத்திற்கு வந்து தொண்டனுக்கி அருட்குருவாய் திருநோக்கரல் உபதேசித்து எல்லாம் சொல்லாமற் சொன்னேம் எல்லாச் சித்தியும் முத்தியுங்கிடைக்கும் என்றும் மறுநாள் சாமிகளுடன் போகவேணு மென்று புலியூர்பாரையில் போயிருக்க தாயார் தகப்பனுர் பின் தொடர்ந்து வர என்முகம் நோக்கி எல்லாந் தன்னுலே வந்துசேரு மென்றும் 40வது ஆண்டில் வருவதாகச் சொன்னுர் அதன்படி 17—7—47ல் திருநெல்வேலி புதுக்குளம் பண்ணையார்செட்டிகுளம் பங்களாவிற்கு வந்து தன்னை அறிவித்து குருமந்திரம் எழுதிக் கொடுத்துகூட இருக்கும் நாளில் இரவில் தூங்காமல் படுத்துக் கொண்டிருப்பார் 4, 5 தடவைபோய் பக்கத்தில் நின்றுகொண்டிருக் கும்போது அகமகிழ்ந்து அவர்கள் பிறந்தகால முதல் நடந்தவைகளை கூற அவைகளையும் பகலில் பக்கத்திலிருந்து தொண்டுசெய்து வரும்போது நேரில் கண்டவைகளையும் 6—8—47ல் சித்தவைத்தி யத்திற்கு தொண்டுசெய்யவேணுமெனக் கட்டளையிட்டு சமீபத்தில் வந்துவேண்டுவன செய்துவைப்பதாகக் கூறியதையும் 13-12-60ல் வடபாதிமங்கலம்போய் விசாரித்தளவில் தெரிந்தவைகளையும்ஒருங்கு சேர்த்து கதிர்காமவேலப்பன் பால்குடி பாவா அருட்குரு முத்துக் குமாரசாமி இவர்கள் தொன்று தொட்டு நடந்துவந்தவைகளையும் என்னை பாதசேகரனுக்கியறிவித்த வண்ணம் அருட்குருவின் சரிதம் இனிதாக முடிவுபெறுமாறு கதிர்காம வேலப்பன் துணை புரிவாராகுக.

18—1—61,
பண்ணிக்குண்டு.

அருட்குரு பாதசேகரன்
சுவாமி சுந்தரமகாலிங்கம்

அ.வசிட்டர்
ஆ.சூரியானந்தர்
இ.சட்கோணரிஷி
ஈ.யூகிமுனி
உ.காகபுசுண்டர்
ஊ.குருராஜா
எ.தேரையர்
ஏ.பதஞ்சலியார்
ஐ.புலத்தியர்
ஒ.கடைப்பிள்ளை
ஓ.கூர்மானந்தர்
ஔ.திருவள்ளுவர்.
ஃ.சுப்பிரமணியர்



க.நந்தீசர்
ங.திருமூலர்
ச.போகர்
ஞ.அகத்தியர்
ட.சட்டைமுனி
ண.கொங்கணர்
த.இராமதேவர்
ந.சுந்தரானந்தர்
ப.கருவூரார்
ம.பிரமமுனி
ய.மச்சமுனி
ர.உரோமர்
ல.இடைக்காடர்
வ.பிண்ணாக்கீசர்
ழ.கோரக்கர்
ள.வாசமுனி
ற.கமலமுனி
ன.அழுகண்ணர்

மூலமந்திரம் ஹ்ரஓம் ஹ்றீம் சீம் சுவாக

சித்தர்களின் பெருமை

மேருவில்வட வீதிதோறுமுயர் வேதஞானசன காதிபர்
மேலை வீதிதிரு மூலவர்க்கமிக வேயிருந்துவிளை யாடினர்
பாருங்கிழ்திசையில் ஐயர்சட்டமுனி பானுமாமலையி லாகினர்
பன்னதென்றிசையி லேயிருந்துதமிழ் பாஷைபோதினர் அகத்தியர்
தாரிலேயிவர்கள் சீடவர்க்கமது கோடிகோடியிவர் தம்மிலே
சாதுசுந்தரரு மச்சர்கூர்மமுனி தாரகாதிபதி கொங்கணர்
சீருலாவிவர வேமடங்களது செய்துசித்ததிக மாடினர்
தேசதேசபல பாஷையாலுமிவர்கள் செப்புநூன்முறை தெரிந்திடே

எனப் பதஞ்சலியார் கூறுகிறார். தாயுமானவரும் சித்தர் கணம் பாடல் 1 முதல் 4 முறையே அகத்தியர், வசிட்டர், புசுண்டர், சட்டமுனி இவர்களின் முக்கிய பெருமையையும் மற்ற சித்தர்கள் பெருமையையும் கூறுகிறார்.

உ சிவமயம்

ஓம்சிவகுருமுருகுவசிஓம்

சாகாக் கல்வியின் விளக்கம்

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவுமாட்டார்
உடம்பைவளர்க்கு முபாயமறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

— திருமந்திரம்

பொற் பங்கயத் தின்புது நறவும் சுத்தசலமும் புகல்கின்ற
வெற்பந்தரமா மதிமதிவும் விளக்கும் பசுவின் தீம் பாலும்
நற்பஞ்சகமும் ஒன்றாகக் கலந்து மரண நவை தீர்க்கும்
கற்பங்கொடுத்தாய் நின்றனக்குக்கைம்மாறேது கொடுப்பேனே

— திருஅருட்பா

நந்தீசர் முதலாக 18 சித்தர்களும் வசிட்டர் முதலாக 13 சித்தர்களும் கூறும் சிவன் உண்ட கற்பம், சிவன் சொன்ன கற்பம், ஞானகற்பம், வாலை கற்பம், என்னும் நால்வகை காயாதி கற்பத்தால் உடலை வலுக்கச் செய்து ஆயுளை நீளச்செய்யும் பஞ்ச தசாட்சரி, சோடசாட்சரி என்னும் இருவகைத் தீட்சையால் சுழி முனையில் கேவல கும்பகம் செய்யில் உயிரை நிலைப்படுத்தக்கூடிய காயசித்தி யோகமாகும். சடத்தில் உலாவிக்கொண்டிருக்கும் பிராண வாயுவான வாசியும் சதா சுற்றிக்கொண்டிருக்கிற மனமும் ஒன்றுசேர்ந்து, சீவாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியம் பெறில் சீவன் முத்தி சடமுத்தி என்னும் இருவகை முத்தியுங் கிடைக்கும்.

வசிட்டர் சட்டோணரிஷி முதல் பல சித்தர்கள் காயாதி கற்பமுண்டு காயசித்தி பெற்று பெரு நெருப்பு மத்தியிலும் மண் தண்ணீர் மத்தியிலு மிருந்தாலும் சரீரம் யாதொரு குறைவன்றியில் சீவித்திருக்கிறார்கள். நம் நாட்டில் பல இடங்களில் மலையில் குகை செய்து அதிலிருந்துகொண்டு மனிதர்கள்போல் நடமாடிக்கொண்டிருக் கிறார்கள், அவர்களைப் பின்பற்றிய தசரத சக்ரவர்த்தியும் (60000) அறுபதினாயிரம் வருட காலம் வாழ்ந்தார். பஞ்சபாண்டவர்களில் முதன்மையான தர்மராசனும் சடத் தோடு கைலாயம் அடைந்தார். சேரநாட்டு மன்னன் சேரமான் பெருமான் சுந்தரமூர்த்தி நாயனாருடன் கைலாயம் சென்றார். இவையாவும் உலகம் அறிந்த விஷயங்களே.

சாகாக்கல்வி (சீவன்முத்தி சடமுத்தி) பெறுதற்கு மனிதர்கள் வழியறி யாது தவிக்கின்றனர் என்று உரோமர் சட்டமுனி திருமூலர் முதலிய சித்தர்கள் (தான்பெற்றபேறு வையகமும் அடையவேணுமாய்) கருணையுடன் யோகம், ஞானம், கற்பம் இவைகளுக்கேற்ற மருந்துகளும், 108 கற்பங்களும் அதற்கு அனுப்பானங் களும் கருப்பேற்று மூலிகைகளும் இவற்றிற்கெல்லாம் குருவாகிய முப்பூ முறைகளும் அவரவர்களின் வயது தேகத்தின் கூறுக்குத் தக்கவாறு சாதனம் செய்துகொள்ளும் முறையும் போகிகளுக்கும் வாசிமனம், வசப்பட இரசமணிகளும் கூறுகின்றனர்.

பலகலை கற்றும் அநேக புண்ணியஞ்செய்த பேர்களும் விரதங்கள் மந்திரங்கள் செய்தபேர்களும் நோய்வாய்ப்பட்டு உயிர் உடலைவிட்டு நவத்துவாரங்களிற்போனால் அவைகளுக்குத் தக்க புண்ணியபாவ ஜன்மங்களை அடைவார்கள். முன்சொன்ன சாதனையின்றி சீவாத்மாவை பரமாத்மாவுடன் ஐக்கியம் பெறவும் மனமும் பிராண வாயுவும் (வாசியும் ஒன்றுபடுத்தவும் முடியாதென்று 1 பாவனை 2 தியானமந்திரம், 3 தந்திர கிரியை, 4 மருந்து (இரசம் கெந்தக செந்தூரம்) யூகம் திறம் இவைகளால் மனம் ஒடுக்க பிராணவாயுவை கேவல கும்பகத்தில் நிறுத்தினார்கள்.

முன்காலங்களில் பிரமஞானத்தை வைராக்கியத்துடன் சாதனம்செய்து சனகன் வாமதேவர் முதலிய மகரிஷிகள் அடைந்தார்கள். சித்தர்களும் காயாதி கற்பமுண்டு நீண்டகாலமிருந்தார்கள். இக்கலியில் பிரமஞானம் தெரிந்தவர்கள் காயசித்தி முதலிய சித்திபெற்றவர்கள் உலகில் இல்லையென்றும், மரணமே நிச்சயம். மக்களால் செய்யும் கிரிகைகளால் மோட்சமென்றும், கூறுகிறார்கள். சித்தர் நூல்களில் இக்கலியில் 5040-க்கு மேல் 3000 பேர் சித்தராகுவார் என்றும் மேருவின் தெற்கில் பலர் கைலாசம் தேடிக்கொள்வார்கள் எனக் கூறுகிறது.

இக்கலியுகத்திலும் சித்தர்களும் பிரமஞானிகளும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் நால்வகையாவர்: யோகி, ஞானி, ரிஷி, சித்தர். உடலைவிட்டுப் பிராணன் போகாத தன்மையைச் செய்தவர்கள் யோகிகள்; உடலைவிட்டுப் பிராணன் போகும்போது உச்சியின் வழியாக (கபாலந் திறந்து) போகும் தன்மையைச் செய்தவர்கள் ஞானிகள்; உடலை விட்டுப் பிராணன் போகாமல் காயசித்திபெற்று உலகோர் தன்மை சகிக்காது பூமிக்குள்ளே சமாதியிலிருப்போர் ரிஷிகள். சிவன் முத்தி, சடமுத்தி, இரண்டும் பெற்று மலைக்குகைகளில் வசிப்போர் சித்தர்கள். பிரளயகாலத்திலும் பஞ்சபூதங்களோடு ஒன்றி பின் தன் சொரூபம் பெறுவர்.


“பசிப்பிணி, நோய்ப்பிணி, பிறவிப்பிணி இவை நீக்கி சித்த வைத்தியத்திற்கு தொண்டு” என்பது 6—8—1947ல் சற்குருநாதன் கட்டளை. என்கடன் பணி செய்து கிடப்பதே. முத்தியை விரும்பும் முக்கிய நோக்கமுடைய ஆண் பெண் அனைவரும் யோக ஞான கற்பசாதனை (சாகாக்கல்வி)யைத் தெரிந்து அதன்படி சாதனம் செய்து சிவன் முத்தி சடமுத்தி அடையுமாறு வேண்டுகிறேன்.

எல்லோரு மின்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.

சித்தயோகி சுவாமி சுந்தரமகாலிங்கம்
தமிழ்நாடு, சித்தவைத்திய சங்கச் செயலாளர்,
சித்தவைத்திய வளர்ச்சி நிலையம்,
பண்ணிக்குண்டு.

திருமங்கலம் தாலூகா
மதுரை ஜில்லா
10—4—1960

இம்பீரியல் அச்சகம், திருநெல்வேலி-6.



முருகன் அருள்

வீறிஞ லெதுவருஞ் சற்குரு பாதத்தை
விரும்பி நிதம்பணிய மெய்ப்பொருள்தான் பெருகும்
ஆறினல் மனஞ்செவ்வாய் பாதை காட்டும்
அருட்குருவும் அப்போது வருவார் தாமே

வருகிறது யெங்கிருந்தும் வரும் போகாது
வந்து தரப்பின் யோசனை செய்தாவதுண்டோ
மருளுகின்ற மனம்விட்டு நல்லறிவிற் சென்று
மகத்தான சாத்திரங்கள் பாடவுமே கற்று
குருவருள்தான் பேர்பெறவே ஞான நூல்லியனுய்
குறையாத செல்வமுடன் கூடி வாழ்ந்து
அருள்பெருவார் அதற்கும் வேறு ஐயமுண்டோ
அவனி தனில் பெரியவித்தக ராகுந்தானே

ஓம்

திருவாரூர் வடபாதிமங்கலம்
அருட்குரு முத்துக்குமாரசாமி சரித்திரம்

கணபதி துதி

மோகமெனுங் கடல் கடந்து முத்தியெனுங் கரைகாண்பான் முதிர்ந்த நாலாம்
பாகமெனு மலர்கொண்டு பத்தியெனும் புனலாட்டி பரிந்துசாத்தி
சோகமெனப் பாலித்துத் துரியமெனும் விளக்கேற்றி சோகம்நீங்கி
யாகமெ னுங்கோயிலின் கண்ணறி வென்னுங் கணபதிக்கேயன்பு செய்வாம்

முருகன் துதி

ஆனந்த மாறெழுத்தாலய மாமென தங்கமெல்லாங்
கானந்தமாதி முதற்பொருளாகிச் சத்தாங்கமு நீ
மோனந்த முன்னுள தென்னுள துன்னுள தென்னுளதால்
ஈனந்தம் போக்கி யென்னீய தாக்கிய வென்குருவே

திரிபுரை துதி

திரிபுரையா றெழுத்தாங்காரி நங்கிலி சிங் தவறுத்
தெரிபுரை யம்பிகை வம்பரைவேற் கொண்டெறிங் துயிரைப்
பரிபுரை யென்னுள்ள மேகோயி லென்பற்றுன் பாயலுமாய்
மரிபுரை யென்னக நின்னகமாக் கொண்டமா தங்கியே

பரமரகசியப்பொருள் துதி

சாத்திரத் தாலளவு படாத்தனி முதலைபராபரத் தைத்தானே தானு
மாத்திரமாய் நிற்ப தனைவாய் விட்டுப்பேசாத மவுன வைப்பைக்
காத்திரவா தனைகடந்த அறிஞருக்குப் பலமீயுங் கற்பக த்தைப்
பார்த்த விடந்தொறு நிகழும்பரம ரகசியப்பொருளைப் பனிதல் செய்வாம்

குரு துதி

தாயினு மிரங்கி யெந்தனைவந் தாண்டருள்
தூயவன் சரணமே சுமக்க வென்றலை
வாய்து திசெயக்கர மலர்க டுய்த்தொழ
நேய மோடனுதின நினைக நெஞ்சமே

தந்தை தாயாவானுஞ் சார்கதியிங் காவானும்
அந்தமிலா வின்ப நமக்காவானும்—எந்தனுயிர்
தானுகு வானுஞ் சரணுதவானும் **அருட்**
கோனு குவா னுங் குரு

அஞ்செழுத் தினுருவாகி யறிவு மாகியாதி நடுவீருவி யநா தியாகிச்
செஞ்சடையிற் கொன்றை தும்பையணீங் தோனுகித் தேனுகிப்
பாலாகி செக மோழாகி
மஞ்சுலவுங் குழலுமை யோர் பாகனுகி மகிழ்ச்சி யுடனெனையாண்ட
குருவுமாகி
வஞ்சம றத்தொழும் அடியாருளத் தில்மேவும் வள்ளல் தனைப்புகழ்ந்
தேத்தி வணங்குவாமே

மாலயனு யுருத்திரனுய் மகேசனுகி மன்னுச தாசிவமா கிவானே
ராகிக்
காலமொரு மூன்றினுமாய் முனிவேர ராகிக் ககனமுதற் பூதபௌதி
கமுமாகிச்
சீலமுடன் தொழும்அடியார்க் கெளியோனுகித் திரை கடலாய் மறை
முடிவாய்ச் சிறியேர்க்கண்பாய்
மேலும் **அருட்குருவடி வாய்** வந்தாட்கொண்ட மெய்ப்பொருளை
யுளத்தில் வைத்துக்கருதுவாமே

1. பரத கண்டத்தின் பண்பு

தொன்று தொட்டு சீருஞ் சிறப்பும் பெற்றுச் சிறந்து விளங்கும் இந்நாவலந் தீவில் மண்ணுசை பொன்னுசை முதலான அநித்தியப்பொருள்கள் பலவகையாகி மாயா மயமான நவநவமாய பலவகை இன்பங்களும் நிறைந்துள்ளதுவாகி உலகினுக்கொத்தவாறு வைதீக இலௌகீக முதலான கருமங்கட்கேற்ப அனுபவித்தற்கிட மாய் போக பூமியாகி விண்ணவரும் மண்ணவரும் பலபிறவியெடுத் தெடுத்து இளைத்திளைத்து இடர்கடல் நீங்கி முத்தியின்பக் கரையை யடைய அவதரித்தற்கிடமாகிபர அபரஞானத்திற்குரிய பலஞான சாத்திரங்களை வரைந்து யுத்திபுத்திக்குரிய பொருந்தத்தார்க்கீக லட் சணத்துடன் தர்க்கித்து ஞானவான்களென்றும் மற்றைய கண்டத் தவரால் மதிப்பற்றும் புசுண்டா 1000ல் இக்கலியில் 5040க்குமேல்

ஞானம் தங்குமென்றும் தன்வந்திரி கலியில் 3000 பேர் சித்தாவகு வார் என்றும் போகர் மேருவின தெற்கில் பலர் கைலாசம் தேடிக் கொள்வார்கள் என்றும் புகழ்பெற்று மகான்கள் வதிதற்கிடமாகி ஒளிர்கின்றது இப்பரத கண்டம்.

2. சோழநாட்டுச் சீர்மை

இத்தகை சிறப்பு வாய்ந்த இக்கண்டத்திலே எல்லாத் தேசங்களிலும் சிறப்புடையதாய் காவிரி யென்னுந் தெய்வத் தன்மையுள்ள நதிபாய்வதினலே எக்காலத்திலுங் குறைவுபடாத நீர் வளப்பமுள்ளதாய் வாழை பலா மா தென்னை கமுகு கரும்பு முதலான அழகிய சோலைகள் அணியணியாகக் கண்ணிற்கு விருந்து செய்யப் பெற்றதாய் அசோகு குருக்கத்தி சண்பகம்பா திரி முதலான விருட்சங்கள் நெருங்கப்பெற்றதினல் வண்டுகள் இசைபாடுகின்ற மலர்ச்சோலைகளும் தாமரைத் தடாகங்களும் அல்லி நீலம் முதான பூக்கள் மலர்கின்ற நீர் நிறைந்த ஓடைகளும் பொய்கைகளும் ஏரிகளும் குளங்களும் பல விடங்களிலுமுள்ளதாய் செங்நெல்முதலாகிய பயிர்கள் மாருது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவை யுடைய வயல்கள் நெருங்கியுள்ளதாய் சிதம்பரம் பஞ்சநதம் மத்தியார்ச்சனம் சம்புகேச்சுரம் முதலான திவ்ய சேத்திரங்கள் இடையிடையிலுள்ள தாய் இல்லற தருமத்தில் எள்ளளவும் பிழைபடாது செல்வத்திலும் கல்வியிலும் நிறைவுள்ள குடிகள் வாழ்வதற்கிடமான தாய் பலவளப்பங்களும் பெற்று பூமிதேவிக்கு முகம்போல் விளங்குகின்ற சோள தேசத்திலே

3. திருவாரூர் சிறப்பு

பாதாள லோகத்தை கீழ்நோக்கிப்பார்த்திருக்கின்ற அழமுள்ள அகழியினல் சூழப்பட்டு இந்திரலோகத்தை எட்டிப்பார்க்கின்ற உன்னதமுள்ள கோபுரங்களையுடைய மதிலும் உத்தியானனம் நந்தவனம் பூஞ்சோலை முதலானவைகளும் தெய்வ தீர்த்தம் பிரம தீர்த்தம் வசந்தவோடை செங்குவளைபோடை முதலான நீர்நிலைகளுமுள்ளதாய் தேர் நிலையங்கள் யானைக்கூடங்கள் குதிரைப்பந்திகள் சேனையிடங்கள் ஆஸ் தான மண்டபம் அரச மண்டபம் விசித்திர மண்டபம் விநோத மண்டபம் நியாய மண்டபம் நிருத்த மண்டபம் கல்வி மண்டபம் கணக்கறி மண்டபம் பாடல் மண்டபம் பரிசன

மண்டபம் சித்திர மண்டபம் தேவாசிரிய மண்டபம் சித்திரத்தெற்றி சிலம்பக்கூடம் ஆயுதச்சாலை அமுதச்சாலை அறச்சாலைகளுமுள்ள தாய்ரத்ன பீடிகைகளும் கனக மாளிகைகளும் பளிங்கு மாடங் களும் மணிப்பந்தல்களும் மகா தோரணங்களும் மங்கல கோசங்களு முள்ளகடை வீதி கணிகையர் வீதி சூத்திரர்வீதி வைசியவர்வீதி அரசர் வீதி அந்தணர்வீதி ஆதிசைவர்வீதி சைவர்வீதி வைதிகர்வீதி தபோதன இருக்கை சைவமுனிவர் மடம் உட்சமையத்தாருறை விடம் முதலான வளப்பங்களையுடையதாய் தியாகராஜப்பெருமான் எழுந்தருளிய கமலாலயமென்னுந்திருக்கோயிலை உள்ளேயுடைய தாய் சோழராஜர்கள் பரம்பரையாக அரசாட்சி செய்து வந்தராஜதானி யாய் திருவாரூர் என்னும் தெய்வப்பதியாம்

4. வடபாதிமங்கலம் மாண்பு

இத்தெய்வப்பதியின் கன்னி திசையில் சுமார் 10 கல் தூரத்தில் தஞ்சாவூர்மாவட்டம் மன்னர் குடிவட்டம் வடபாதிமங் கலம் என்னும் ஊரில் தொண்டமண்டல முதலியார்வம்சத்தில் திலகமாய் வாழ்ந்துவந்த முன்னோர்கள் தியாகராஜப்பெருமானுக்குத் தொண்டர்களாக வாழக்கருதி அப்போதிருந்த 1001 வேலி நஞ்சை நிலங்களில் 501 வேலி நிலங்கள் திருவாரூர் தியாராஜப் பெருமா னுக்கு தானசாசனம் செய்துவைத்தும் மற்ற பாதி 500 வேலி நஞ்சை நிலங்களும் கிழ்திசையில் ஸ்ரீ அருணசலேசுவரர் தேவஸ்தானம் என்னும் பேரால் தெய்வத்தலம் கணபதி சுப்பிரமணியர் அருணசலேஸ் வரர் உண்ணுமலையம்மாள் தியாகராஜர் நடராஜர் ஆலயங் களமைக்கப்பெற்று கோவிலுக்கு மேற்கே அவர்களின் தரத்துக்குத் தக்க இல்லங்களமைத்து பண்ணையார் என வாழ்ந்துவரும் வடபாதி மங்கலம் என்னும் ஓர் தெய்வத்திருப்பதியுள்ளது

5. அன்னை தந்தை குலமும் தன்மையும்

அத்திருப்பதி வடபாதிமங்கலம் அதின்கண் வசிப்பவராய் தியாகராஜப்பெருமான் தொண்டர்களாய் ஈஸ்வரபக்தி முதலிய நற் குணங்களிற் சிறந்தவராய் தொண்டமண்டலத்திலகராய் சிவத்தியா னம் கனவிலுமறவாததூயசித்தமுடையவராய் சிவனடியார்களுக்கும் ஆதாரமற்ற ஏழைகளுக்கும் அமுதுபடைக்கும் அன்பு நிறைந்த வராய் என்னும்

பெயருடைய ஓர் பெரியாரிருந்தார் தமது அறவொழுக்கம் தவராது நடத்தும் பொருட்டு
கற்பிற்சிறந்தவராய் பொறையில்பூமிமகளாய் இலக்காகித்திருவாகும் அண்ணியாரும் முதலியார்
அவர்களும் உடல் உயிர் போன்று இருவரும்பிரியா அன்பினராய் நல்லறமாகிய இல்லறவழியிலேயே பல்லறங்களைவளர்த்து வந்தனர் மகப்பேறு தமக்குகிடைக்கவேண்டுமென்று தினமும் தியாகராஜப் பெருமானைக்குறித்து வேண்டி வருவாராயினர் அப்பெருமானும் 501 வேலி நஞ்சை நிலங்களை பெற்ற காரணத்தால் கைமாறுகதிருவுளங் கொண்டு கதிர்காமத்தண்ணல் தொண்டறிர் சிறந்தவராய்விளங்கும் படி அருள்பாலித்து கரு உண்டாகி பத்துமாதங்களும் நிறைவேறின

6. தெய்வத்தன்மை திரு அவதாரம்

கலி 4929 வருடம் மாதம் தேதி கிழமை மூலநட்சத்திரம் கூடிய சுப தினத்தன்று இற்றைக்கு 133 ஆண்டுகளுக்கு முன் வடலூர் இராமலிங்கசுவாமி அவர்களுக்கு நாலு ஆண்டுகளுக்குபின்னும் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம் ஸருக்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னும் ஆதி அகத்தியர் காசியில் ஆதி நாராயண அய்யருக்கும் இலட்சுமி அம்மாளுக்கும் புத்திரனுக சங்கு சக்கர கபாலரேகையுடன் பிறந்தார் அவ்வடையாளமுள்ளவ ராக வடபாதிமங்கலத்தில் குழந்தையாக திரு அவதாரம் செய்தார்

7. பெருமான் பிள்ளைப்பருவம்

அன்னை பிதா இருவர்களும் அந்நாளில் பல நன்விழாக் கண்டு அடியார்க்கும் அன்பர்க்கும் சுற்றத்தாருக்கும் ஏழைகட்கும் நல் விருந்திட்டு ஆன்றோர் பலரை வருவித்து அவர் தம் முன்னிலை யில் எல்லாம்வல்ல தியாகராஜப் பெருமானின் அருளை நினைந்து (தில்லை நாயகனுமவன் திருவரங்கனுமவன்) என எண்ணி அம் மகவிற்கு ரெங்கநாதன் என திருநாமமிட்டு தெய்வ இன்பத் திற்றிளைந்திருந்தார்கள்.

அன்றுமுதல் அத்திருப்பதி வடபாதிமங்கலத்தில் பல அற்புத நிகழ்ச்சிகள் நிகழ்ந்துவரும்போது அப்பதியிலுள்ளவர்களுக்கு நோய்முதலியன தலை காட்டாது ஒழிந்தன. மாடுகள்கன்றுகள் யாவும்

செழித்து ஓங்கின. சகல சீவராசிகளும் மகிழ்ச்சியுடனிருந்தன. இவ்வாறு அறநிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன.

குழந்தையைப் பார்த்த ஊரார் அப்பதியிலுள்ளவர்கள் குழந்தையாக நினையாது இக்குழந்தை குழந்தைவடிவில் தோன்றிய குமரவேளே எனக் குதூகலமுடையவர்களாய் குழந்தையினிடத்துப் பெரிதும் அன்பும் பக்தியும் செய்து பெற்றாலும் இவர்களைப்போலல்லவோ பேரு பெறல்வேண்டும் என வாயார வாழ்த்தி வரலாயினர்.

8. அன்னையார் பிரிவும் தந்தையார் வாழ்வும்

அன்னையார் அவர்களும் மகனைப்பெற்ற அன்றிலும் அதிகப் பெருமித மகிழ்ச்சியுடையவராய் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தம் ஆருயிரன்ன அருமை மகவினை அன்போடு வளர்த்துவந்தார்கள். இவ்வாறு (4) நாலு ஆண்டுகள் கழியவும் அன்னையார் அவனிவாழ்வு நீத்து அமர வாழ்வு எய்தினர். தந்தையார் அவர்களும் இல்லற தர்மத்தை செவ்வனே நடத்தவேண்டியவராய் தமது குலத்தில் திலகம்போல் விளங்கும் ஓர் உத்தமத் தன்மை வாய்ந்த பெண்மணியை (2) வது விவாகம் செய்துகொண்டு தொண்டமண்டல குலத்துக்கிணங்க தமது ஞானச் செல்வப் புதல்வனுக்குத் தானமும் தவமும் செய்து முன்னிலும் பன்மடங்கு துணைபுரிந்து வந்தார்கள்.

9. ரெங்கநாதன் ஓதாதுணர்தல்

தந்தையார் தமது மகனை ஐந்தாவதாண்டில் கல்வி பயிற்ற வேண்டுமென்று கருத்துடையவராய் ஓர் ஆசிரியரை வரவழைத்து முறைப்படி வித்தியாரம்பம் செய்துவைத்தார் குழந்தைப் பருவமாகயிருக்கும் ரெங்கநாதப் பெருமானும் பயபக்தியுடன் ஆசிரியரிடம் பாடம் படித்துக்கொள்வதுபோலிருந்தாலும் தமது கருத்து முழுவதும் கதிர்காமம் வேலப்பனிடமே செலுத்தியிருந்தார். ஒவ்வொரு நாளும் வடபாதிமங்கலத்திலுள்ள அருணாசலயீஸ்வரர் தேவஸ்தான ஆலயத்திற்குச்சென்று கணபதி முருகன் தியாகராஜப்பெருமான் நடராஜர் அருணாசலயீசர் உண்ணாமலையம்மை முறையே பக்தியுடன் வலஞ்சென்று துதித்தவந்தார்.

தந்தையார் கல்வி பயிலுவதில் கருத்தை செலுத்தவேண்டு மென்று அன்போடு மொழிந்தார். அதற்கு தாம் ஒழுங்காக கல்வி பயிலுவதாகவும் தமக்குத் தனியே ஒரு அறையினை கொடுக்க வேண்டுமெனவும் கேட்க தந்தையாரும் ஒரு மாளிகையை அக மகிழ்ந்து அவருக்குக் கொடுத்தார். சிவனடியார்களுக்குத்தொண்டு செய்வதிலும் திருவெண்ணீற்றுக் காப்பு அணிவதிலும் பெரியோர் களால் வகுக்கப்பட்ட தர்மங்களை தானே செய்யுந் திறமைபெற்ற வராய் கதிர்காமம் வேலப்பனை தெரிசிக்க ஆவல் கொண்டவராய் தன் (12) பனிரெண்டாவது வயதளவில் பஞ்சணையில் தமது வேலை யாட்கள் சூழ சயனித்திருந்தார். அப்போது

10. பால்குடி பாவாவின் தெரிசனக்காட்சி

கதிர்காமம் வேலப்பனின் பேரருள்பெற்ற பால்குடி பாவா அவர்கள் அருட்குருவாக சுவாமி அவர்கள் முன் தோன்றி தட்டி எழுப்பி சூழயிருக்கும் வேலையாட்களுக்குத் தெரியாமல் அன்னாரின் மூதாதைகளால் திருப்பணி செய்துவைத்திருக்கும் அருணசல யீஸ்வரர் தெய்வப் பதியின் ஈசான்யத்தெப்பக்குளத்திற்குக் கூட்டிப் போய் தாகவிடாய் தீர் என இரண்டுகையாலும் எடுத்து உட்கொள்ள என்னுடன் வருகிராயா என்று கேட்க சரி என்று ஒப்புக்கொள்ள கண்ணிரண்டையும் மூடிக்கொள் எனக் கையைப் பிடித்து (ஆகாய கெவுனமாய்) முகூர்த்தகால நேரத்திற்குள் ரிஷிகேசத்திற்குப்போய்ச் சேர்ந்தார்கள். அன்னார்களின் தவத்தின் பெருமை அளவிடற் கரி தாகும் அருட்குருவின் பூதசல யோகத்தின் லட்சணங்கள் (4) நாலு அவைகளில் ஆகாயத்தில் செல்லுதல் ஒன்று

11. ஆடம்பரங்களையகற்றல்

சுவாமி அவர்கள் பால்குடி பாவாவாகிய அருட்குருவுடன் ரிஷிகேசத்திலிருக்க மறுநாள் தன்னை மறந்தவராய் அணிந்திருந்த விலையுயர்ந்த ஆபரணங்களை ஒவ்வொன்ருய்க் கழற்றி ஈதெற் கென்று சொல்லி சுழற்றி எரிந்தார்.

12. ஞானோபதேசம் பெறல்

பால்குடி பாவா அவர்கள் சில நாட்கள் கூடயிருந்து ஞானோபதேசம் செய்வித்து அங்குள்ள ஓர் மலைச்சாரில் தவயோகத்

திலிருந்திவைத்து கதிர்காமம் வந்து வேலப்பனுக்கு வேண்டிய திருப்பணிகள் செய்துகொண்டிருந்தார்கள்.

13 ரெங்கநாதன் தவயோகம்

பால்குடி பாவா அவர்களின் பூரண கடாச்சத்தால் (20) இருபது ஆண்டுகள்வரை உருவ ஆகாரமின்றி தவயோகத்தில் அசைவற்றிருந்தார்.

14. இறைவன் வெளிப்படுதல்

தவயோக பலத்தால் இறைவன் உமாதேவியார் இடது பக்கத்திலிருக்க ஜடாமகுட திரிநேத்திரகாளகண்ட சதுர்புஜம் முதலானவை விளங்க தர்ம சொரூபமாகிய இடபவாகனத்தின்மேல் சர்வமங்கள சக்தியே திருமேனியாகக்கொண்ட பெருமான் எழுந்தருளி தரிசனங்கொடுத்து குளிர்ந்த நிலவு ததும்பி வீசுகின்ற புன்னகை காட்டி திருக்கண்களால் அருள்நோக்கஞ் செய்து யாதுனக்கு வேண்டுமெனக் கேட்க அதற்கு என்றும் அழியாத வரம் வேண்டுமெனக் கொடுத்தோமென்றும் சொல்லுகிறேன் கேள்

15 இறைவன் கட்டளையை மறுத்தல்

ஆனால் நீ உலகமக்களுக்குத் தொண்டுகள் செய்யவேண்டியதிருக்கிறது. அவைகளை பூர்த்தி செய்யென அதற்கு உலகிற்கு என்னலாவது யாதொன்றுமில்லை இதைவிட்டுச் செல்லேன் என மறுத்தார்.

16 இறைவனுக்கிணையால் ஏற்பட்ட துன்பம்

அவ்வேளையில் நேபாள அரசன் வேட்டையாட வந்து மிருகங்களைக் காணாது சுற்றிக்கொண்டிருக்கும்போது சுவாமி அவர்களை மானைக் கருதி சுட்டார் முன்புறம் இருதயத்தின் வலது பக்கங் குண்டுபட்டு ஊடுருவிப் பின்புறமாகச் சென்றுவிட்டது. மானை எடுக்கக் கருதிய அரசன் தன் பரிவாரங்களுடன் வந்து கொண்டிருந்தார்.

17. பால்குடி பாவா சுட்ட துணை அடைத்தல்

பால்குடி பாவா அவர்கள் இறைவனுக்கிணையால் ஏற்பட்ட ஆபத்தை நீக்கக் கருதி ஆகாய கெவுனமாக வந்து ஈதென்ன செய்யும் என்று அவ்விடத்திலுள்ள மகாமூலிகை ஒன்றைப் பிடிங்கிக் காண்பித்து கசக்கி மடியில் தூக்கிவைத்து முன்னும் பின்னும் தடவ குண்டுபட்டயிடம் மறைந்து போயின. (அன்று பங்குனி உத்திரத்) திருநாளாம் இவ்வறிய செய்கையறியாத

18. நேபாள அரசன் மன்னிப்பு

நேபாள அரசன் மானெனக் கருதி பரிவாரங்களுடன் வந்து பார்த்தளவில் இரத்தம் பீறிட்டு பூமியில் சொறிந்திருப்பதையும் அதாலிருவரும் துன்புறுது மகிழ்ச்சியுற்றிருப்பதையும் கண்டு நடு நடுங்கி வாய் குளறி தெரியாமல் செய்த குற்றத்தை மன்னிக்க வேணுமாய் தண்டம்போல் பூமியில் விழுந்து வணங்கி தன்னைக் காப்பாற்றவேணுமாய் பிரக்ஞையற்றவராய் நின்றுகொண்டிருந்தார்.

19. நேபாள அரசனுக்கு இறைவனுக்கிணை கூறல்

அதற்கு பால்குடி பாவா அவர்கள் அரசனை நோக்கி ஏ ராஜன் இது நீ செய்ததல்ல இறைவனுக்கிணை (இறைவன்) சொன்னதை மறுத்ததால் ஏற்பட்ட விளைவு அஞ்சேல் என நன் மொழி புகன்றார். ஆனாலும் என்னால் ஏற்படக்கூடாதே அதற்கு நான்செய்யவேண்டிய கடமை யாதெனக்கேட்க அரசனே நின் மனம் நன்மதியடைய இவரை உன் அரண்மனையிலிருத்திவை நான் வந்து கூட்டிப் போகிறேன் என்று தேறுதல் சொல்லிக்கதிர்காமம் திரும்பப்போனார்.

20 நேபாள அரசன் அழைத்துச் செல்லல்

அரண்மனையிலிருத்திவை யெனக் கூறியதைக் கேட்ட அரசன் மன மகிழ்ச்சியுடன் சுவாமி அவர்களை வணங்கி மேனாவைக் கொண்டுவந்து அதிலமரும்படிசெய்து பரிவாரங்களுடன் அரண்மனைக்குக் கொண்டுபோய் பல உபசாரங்கள் செய்து நடந்த தன்மையை அரசனால் யாவருக்கும் கூறவே கேட்டவர்களெல்லாம் சுவாமி அவர்களுக்கு தொண்டுசெய்து அடிமைகளாயினர்

21. தவவேடம் சிவலிங்க பிரதிஷ்டை

அரண்மனையில் சிலகாலமிருந்து வரும்போது சுவாமி அவர்களுக்கு தனியாத ஆச்சிரமம் இருக்கவேணுமாய் கட்டிமுடித்து அதிலிருக்கவேணுமாய் கேட்டுக்கொண்டார். அரசனால் ஏற்படுத்திய ஆச்சிரமத்தில் தனித்திருந்து ஞானயோக சாதனங்களை செய்து முடித்துக்கொண்டு தவவேடத்தை மாற்றி சந்நியாசி ரூபமாயிருக்கக் கருதியவராய் சுவாமிகள் அரசன் வந்தபோது தெரிவிக்க கட்டளையின்படி நடந்துகொள்கிறேன் என தனது சிகை முதலானவைகளை எடுத்து ஓரிடத்தில் சமாதிக்கேற்ப அதற்கத் திருப்பணிசெய்து சிவலிங்க பிரதிஷ்டை செய்யவேணும் என அரசனும் அப்பணியை சிரமேற்கொண்டு சுவாமி அவர்களின் சிகை முதலானவைகளை எடுக்கும் உபாயம் செய்வித்து அவைகளைச் சமாதிசெய்து ஆலயம் கட்டிமுடித்து சிவலிங்க பிரதிஷ்டை செய்துவைத்து சிவாலயங்களுக்கேற்ப பூசை நன் விழாக்கள் முதலியனவும் சந்நியாசி ரூபமாக அமைந்திருக்கும் சுவாமி அவர்களுக்கு அபிஷேகாதி முதலியனவும் அடிமைகளாயினவர்கள் செய்துவந்தார்கள்.

22. பால்குடி பாவா நேபாளம் வந்தது

கதிர்காமத்திலிருந்து முன்போல் நேபாளம் சுவாமிகளிருக்குமிடம்வந்து அரசனால் போற்றப்பெற்று சௌக்கியமடைந்தாய் என்னுடன் வாவென மொழிந்து அரசனுக்குத் தெரிவித்துக்கூட்டிவந்து ரிஷிகேசத்தில் ஓர் பன்னகசாலையமைத்து அதிலிருந்து முருகவேள் அருள்பெற தவமியற்றிவரவேணுமாய்க் கூறித் தன்னிருப்பிடமான கதிர்காமத்துக்குச் சென்றார். குருநாதன் கட்டளைப்படி முருகப்பெருமானிடம் அருள்பெற எண்ணி தவமியற்றியவண்ணம் வரம் பெற்று ஆனந்தக் கடலில் மூழ்கினவராய் அநேக அற்புதச் செயல்களை உலகோர் மகிழும்படி செய்துவந்தார்.

23. முத்துக்குமாரசாமி எனத் திருநாமம்

பால்குடி பாவா அவர்கள் முன் வழக்கம்போல்வந்து அருகிருந்து அகமகிழ்ந்து (முத்துக்குமாரசாமி என திருநாமம் சூட்டினேம் என்றும் இந்நாமம் உயர்ந்தோரும் உலகோரும் போற்றும்படி வாழ்வாயென ஆசீர்வதித்து தனது திருத்தொண்டுக்குரிய கதிர்காமத்துக்கு

முன்போல் கூட்டிப்போய் வேலப்பனின் பூரண கடாக்ஷம் பெறும்படி திருவருள் புரிந்தார்.

24. முத்துக்குமாரசாமி வேலப்பன் அருள்பெறல்

கதிர்காம வேலப்பன் பால்குடி பாவாவிற்கு பேரருள்பாலித்த வண்ணம் பல காட்சிகள் காண்பித்து தன் வயமாக்கி குருவுக்கு சிலகாலம் தொண்டு செய்துகொண்டிரு என சுவாமி அவர்களும் பால்குடி பாவாவிற்கு ஏவா மக்கள் மூவா மருந்து என்ற முது மொழிக்கினங்க குறிப்பறிந்து தொண்டு செய்துவந்தார்கள். தொண்டு செய்வதைக்கண்டு அக மகிழ்ந்தோம். இனி ஆறுபடை வீடுகளையும் காசியையும் தரிசிக்கவேணும் என்றும் உலக மக்களுக்குச் சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு உதவி புரியவேணுமாய் வினவ விடைபெற்று கதிர்காமத்திலிருந்து முதலாவதாக திருப்பரங்குன்றம் முருகனைத் தெரிசிக்க கருதி மதுரை வந்து சேர்ந்தார்.

25 ஆறுபடை வீடுகள் சென்று அருள்பெறல்

முத்திதரும் கதிர்காமம். பழனிதன்னில்
முன்வினையின் பவம்போக்கும். மோட்சமோடு
சித்திதருங் கழுகுமலை. செல்வோர்க்கெல்லாம்
திருப்பரங்குன்றங் கனகசேவையாகும்
பத்தர்தனக்கதிக வரமருளுஞ் செந்தூர்
பரப்பிர்ம சொருபமதைப் பணிவோர்க்கெல்லாம்
என தோத்திரப்பா

சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகம் நீங்கா திறைவன். சிலப்பதிகாரம்

1 திருப்பரங்குன்றம் மதுரைக்கு தென்புரத்திலுள்ளது.

2 திருச்செந்தூர் திருநெல்வேலிக்கு தென்கிழக்கிலுள்ளது.

3 திருவர்வினன்குடி பழனிமலை அடிவாரத்திலுள்ளது.

4 திருவேரகம் நாகர்கோவில் தக்கலைக்கு 2 மைல் தூரத்திலுள்ளது.

5 குன்றுதோறாடல் திருக்கைலாயமலை கதிர்காமம், திருச்செங்கோடு,திருத்தணிகை, மயூரகிரி, (குன்றக்குடி) திருவுருமாமலை (திருநெல்வேலி குருக்குத்துறை) திருவண்ணாமலை. சுவாமிமலை முருகன். திருமலைக்குமரன் கழுகுமலை குகன். என திருப்பதிகள் (30) முப்பது என்றும் அடியார் உள்ளத்தில் ஒன்று.

6 பழமுதிர்சோலை மதுரைக்கு வடக்கே12 மைல் தூரத்தில் அழகர்கோவில் என வழங்கும் பதியாம்.

அந்தந்த மூர்த்திகளின் அருள்பெற்று தனது குருவினையும் வேலப்பா என்று சொல் மறவாத வண்ணம் மகிழ்ச்சியுடன் உலக மக்களுக்கு நன்மைசெய்வதே கடமை என பணியாற்றிவந்தார்கள்.

26. காசிவிஸ்வநாதர் தெரிசனம்

குருவின் வாக்கின்படி ஆறுபடை வீடுகளையும் கண்டு அறுமுகப்பெருமான் திருவருள் பெற்றோம் இனி காசிவிஸ்வநாதர் திருவருள் பெறவேண்டுமென்றெண்ணி காசியையடைந்து கங்கையில் நீராடி விஸ்வநாதர் விசாலாட்சியம்மையை நாள்தோறும் தெரிசித்து அருள்பெறவேண்டியவராய் சிலகாலம் தங்கியிருக்கும்போது விஸ்வநாதரும் விசாலாட்சியம்மையும் பேரருள் சொரிந்து அங்கேயிருக்கும்படி செய்தார்கள் சுவாமி அவர்களும் மனமகிழ்ச்சியுற்று சந்நிதி முன் நிஷ்டை செய்துகொண்டிருந்தார்கள்.

27. முத்துக்குமாரசாமி திருவிளையாடல்

அந்நாளில் பம்பாய் சேட் பத்தினி சகிதமாக முறையே 48, 45 வயதுள்ளவர்களாய் சந்ததியில்லாது சொர்க்கமடைய விரும்பியவர்களாய் சிலகாலம் தங்கியிருந்து நாள்தோறும் விஸ்வநாதர் விசாலாட்சியம்மையையும் தெரிசித்து வரும்போது நிஷ்டையிலிருக்கும் சுவாமி அவர்களை பார்த்தளவில் தம்பதிகள் தண்டம்போல் விழுந்து வணங்கினர்கள். பிரசாத மீய்ந்து ஆசீர்வதித்து புத்திரன் பிறப்பான் என அவர்கள் சந்தேகிக்க நீங்களிருக்குமிடம் போகுமுன் ரசஸ்வலையில்லாதிருந்த நின் மனைவி ஆவாள் என அவ்விருவரும் சுவாமிகளிடம் விடைபெற்று தன்னிருப்பிடம் போகுமுன் சுவாமி அவர்களின் திருநோக்கால் சந்ததிப் பேறடையும் அறிகுறியைக்

கண்டு மகிழ்ச்சியுடன் தன் கணவரிடம் தெரிவிக்க சேட் பத்தினியை அவ்விடத்திலிருத்திவைத்து ஆனந்தக் கடலில் மூழ்கிய வராய் தன் மனைவிகண்ட அற்புதச் செயலைத் தெரிவித்து வணங்கி நாங்கள் புத்திரனுடன் வந்து எங்கேகண்டு தெரிசிப்பதெனக் கேட்க அப்போதும் இவ்விடமே பார்க்கலாமென விடைபெற்று பத்தினி யிருக்குமிடம்சென்று சுவாமி அவர்கள்மொழிந்தவற்றைமனைவியிடம் சொல்லி தங்கியிருந்தயிடம்போய் மறுநாளே பம்பாய் போவதற்கு பிரயாணமாகி தனது இல்லஞ் சேர்ந்தார்கள் வந்த காரியம் யாதென நெருங்கிய சுற்றத்தார் கேட்க சுவாமிகளால் ஏற்பட்டவைகளை முற்றிலும் கூறி புத்திரனுடன் அங்குபோய் சுவாமி அவர்களுக்கு தொண்டுசெய்துகொண்டிருப்போமென்று கேட்டவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியுடன் கூறியும் ஆனந்தமேற்கொண்டு இல்வாழ்க்கையை நடத்தி வந்தார்கள்.

28. பம்பாய் சேட் புத்திரப்பேறு பெற்றது

சுவாமி அவர்கள் ஆசீர்வதித்தவண்ணம் சேட்பத்தினி மணி வயிற்றில் கருத்தரித்து வளரும்போது பெண்களுக்குண்டாகும் தளர்ச்சி முதலியவையின்றி ஒவ்வொரு மாதங்களாய்! ஒன்பது மாதங்களும் கழிந்தன. ஆண் மகவை பெற்றாள் தம்பதிகள் சுவாமி அவர்களை வாயார வாழ்த்தி ஆனந்தங்கொண்டவர்களாய் குழந்தை பிறந்ததுமுதல் ஒவ்வொரு நாளிலும் செய்யவேண்டிய நற்காரியங் களைச் செய்துகொண்டு குழந்தையை நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்த்துவரும்போது ஓராண்டு நிறைவநாள் முன் காசிக்குப்போய் சேரவேண்டுமெனக் கருதி அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் ஏழைகளுக்கும் அன்ன மளித்து புத்திரனுடன் தம்பதிகள் பிரயாணமானார்கள்.

29. பம்பாய் சேட் புத்திரனுடன் காசி செல்லுதல்

பம்பாயிலிருந்து சேட் பத்தினி குழந்தையுடன் புறப்பட்டு காசி விஸ்வநாதர் சந்நிதியில் சுவாமி அவர்களை பார்க்கப்போனார்கள் சுவாமி அவர்களும் அங்கேயிருக்க கண்டு சேட் பத்தினி இருவரும் குழந்தையை சுவாமி அவர்கள் முன்வைத்து தண்டம்போல்வணங்கி ஓராண்டு நிறைவுநாள் அறிவித்தார்கள். சுவாமி அவர்கள் பிரசாத

மீய்ந்து ஆசீர்வதித்து நிறைவுநாளில் செய்யவேண்டிய நற்காரியங்கள் செய்து திருநாமமிட்டு தெரிவிக்குமாறு கூறினர். அம்மகவிற்கு ஓராண்டு நிறைவுநாளில் செய்யவேண்டியவையெல்லாம் பூர்த்தி செய்து பல தர்மங்கள் செய்தும் விஸ்வநாதர் விசாலாட்சியம்மைக்கும் அபிஷேக அலங்கார முதலாக நைவேதனம் நடத்தியும் சுவாமி அவர்கள் முன் பல அடியார்களுக்கு அன்னமிட்டு சுவாமி அவர்களின் திருவருளால் புத்திரப்பேறடைந்தோம் தொண்டுசெய்ய வந்துற்றோம் என அடியார் பணியை பொருளால் உம்மால் செய்யமுடியுமே யொழிய குருதொண்டு செய்யப்பெரும் பாக்கியமும் பக்குவமும் வேணும் என அதற்கவர் சுவாமி அவர்களின் திருவாக்கின்படி நடந்துகொள்வதாகக் கூறினர்கள்.

30. பொருள் நயவாமை

சுவாமி அவர்களுக்குப் பொருள் விரும்பும் தொண்டு செய்வதை ஏற்றுக்கொள்வதற்கிசையும் மனவிருப்பமில்லாதவர்களாய் அடியார்களுக்குப் பணியாக காசி கேதாரக் கட்டத்தில் ஓர் மடாலயம் அமைத்து அதில் தினம் 21 அடியார்களுக்கு அன்னமளிக்க வசதி செய்துவைத்தால் நலமென அதற்கு சேட் திருவாக்கின்படி நடந்துகொள்வதாகக்கூறி பத்தினி குழந்தையுடன் பம்பாய் போய் அவர்களை இல்லத்திலிருத்திவைத்து சுவாமி அவர்கள் கூறிய வண்ணம் செய்துமுடிக்கத்தக்க பணவசதிகள் முதலானவைகளுடன் புறப்பட்டு காசிவந்து சேர்ந்தார்.

31 காசியில் முத்துக்குமாரசாமி மடாலயம்

சுவாமி அவர்களால் குறிப்பிட்ட கேதாரக் கட்டத்தில் போதிய யிடம் அமைத்து வாங்கி அதில் சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரை சிலவுசெய்து திருப்பணி முடித்து தினம் 21 அடியார்களுக்கு அன்னமளிக்க போதுமான வசதிகள்செய்து (முத்துக்குமாரசாமி மடாலயம் என பெயரிட்டு சுவாமி அவர்களின் திருவாக்கின்படி பூர்த்திசெய்துள்ளேன் ஏற்றுக்கொள்ளவேணுமாய் ஒப்புவித்துத் தன்னிருப்பிடமான பம்பாய்க்குச் சேட் விடைபெற்றுப்போய்விட்டார். அம்மடாலயத்துக்குப் பக்கம் திருநெல்வேலி தளவாய்

முதலியார் முன்னோர் ஏற்படுத்திய தோப்பு முதலானதுகளிருக்கிறதாம்.

32. ரிஷிகேசத்தில் பால்குடிபாவா தருமசத்திரம் கட்டவேணுமாய் கட்டளையிடுதல்

அதன்பின் கதிர்காமத்திலிருந்து பால்குடிபாவாஅவர்கள்காசி மடாலயத்திற்கு வந்து தன்னாலாகாதவர்கள் பிரத்தியாரைக்கொண்டு செய்யச்சொல்வது வழக்கம் உன்னால் ரிஷிகேசத்தில் கம்பிளி பாவா அவர்களின் தரும சத்திரத்திற்குப் பக்கம் அதிலும் விமரிசையாக தோன்றும்படி திருப்பணிசெய்துவைத்துஅங்குவரும்தவசிகள் ஞானிகள் கேட்பவைகளை இல்லையென்னாது கொடுத்தும் அன்னமளிக்க வசதிசெய்து வைக்கவேணுமாய் கட்டளையிட்டார்கள் இப்பணியை எவ்வாறு செய்துமுடிப்பதென மனம் வருத்தமுற சித்தர்களுக்கு வழக்கம் (இரசவாதம்) நீயும் செய்துகொள்வதற்கு தகுதிவருமென்றும் செய்முறை கைமறைகளையும் காண்பித்து தனது யிருப்பிடமான கதிர்காமத்துக்குச் சென்றார்.

33 ரிஷிகேசத்தில் தருமசத்திரம்

சுவாமி அவர்கள் குருவின் கட்டளையை சிரமேற்கொண்டு ரிஷிகேசம்போய் கூறிய இடத்தில் ஓர் பன்னகசாலையமைத்து அதிலிருந்துசொண்டு (இரசவாதம்) குருவினருளால் செய்துகொண்டு சுமார் (600000) ஆறு லட்சம் ரூபாய் மதிப்பிடும்படியாக பார்த்தோர் அதிசயிக்கும்படியாக உன்னதமான கட்டிடங்களை கட்டிமுடித்து அன்ன முதலானவைகள் குளிர் தாங்கும் கம்பிளி முதலானவைகள் அங்குவந்து தங்கும் ஞானிகள் தபசிகள் யோகிகளுக்கு வேண்டிய பலவகைத் தானவகைகளுக்குப் போதுமான வருவாய் தரும் வசதிகள் சேகரித்து வைத்துக்கொண்டு அங்கிருந்து யாத்திரையாகவரும் தவசிகள் ஞானிகள் யோகிகளுக்கு வேண்டுவன செய்து தாத்தக்க சகாக்களுடன் குருவருளை நினைந்து தொண்டுசெய்துகொண்டிருந்தார்கள்.

34. ரிஷிகேசம் தருமசத்திரம் பார்வையிடல்

தனது குருவான பால்குடி பாவா அவர்களிடம் திருவாக்கின்படி பூர்த்திசெய்து வைத்திருப்பதை காண்பிக்க வேண்டியவராய்

எதிர்பார்த்திருக்க அவர் எண்ணத்தை தெரிந்து ரிஷிகேசம்வா குருவின் கட்டளைப்படி நடத்திபிருக்கும் வைபவங்களை காண்பித் தார்கள் அவைகளைப் பார்வையிட்டு மகிழ்வுற்று கொஞ்சநாள் கூட யிருந்துஉனக்குவேண்டியமுக்கியமான காரியங்களிருக்கிறதுஅதைக் கூறுகிறேன் கேட்பாயாக சித்தர்கள் தரிசனம் சீடன் வேணும் ஆன தால் இனி நீ

35. சீடன் வேணுமெனக் கட்டளையிடுதல்

தென்திசைக்கேகி அங்குள்ள கொல்லிமலை பொதிகை சதுரகிரி முதலிய இடங்களுக்குப்போய் சித்தர்களைத் தரிசித்து அவர் களுக்குத் தொண்டர்கையிருந்துவர வேணுமென்றும் உனக்குச் சீசன் வேணுமானதால் அவனையும் உன்னைப்போலாக்கும் செயல் தந்தோமென கூறித் தன்னிருப்பிடமான கதிர்காமத்துக்குச் சென்றார். குருவின் வாக்கின் பிரகாரம் நடந்துவரும் உத்தம குணத்தை யோசிக்குமளவில் குருவுக்கேற்ற சீசன் என முதுமொழி கூறுவர் அதுவேயிவர்கள்பால் தோன்றியிருப்பது எனச் சொல்லா மலே விளங்கும்.

36. சுவாமி விவேகானந்தருக்காக அமெரிக்கா சென்றது

சுவாமி விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு எட்டு ஆண்டுகள் வயதில் பெரியாராகயிருக்கும் முத்துக்குமாரசாமி அவர்களை ஒத்தாசைக்கு வரவேண்டுமென கேட்டால் சம்மதிப்பார் அவர்பால் சென்று தெரிவிக்கவேண்டியவராய்வா சுவாமி அவர்களும் குருவின் கட்டளைக்குட்பட்ட காரியமெனக் கருதி நீங்கள் அமெரிக்காவில் போய்சேரும்போது நானும்வந்து சந்திக்கிறேன் எனக்கூறி எல்லாம் நலமாக முடியும் என்றும்தான்அமெரிக்காவிற்கு வரும் தன்மையறிவித்து நாளும் இடமும் தேவையென அகமகிழ்ந்து தெரிவித்து விடைபெற்று அமெரிக்கா சுவாமி விவேகானந்தர் பிரயாணமானார் அமெரிக்காவிற்கு சென்று தங்கியிருக்குமிடமும் சபைக்கு போகவேண்டிய நாளும் சுவாமி அவர்களுக்குத் தெரிவித் தோம் வருவார் என முழு நம்பிக்கையுடனிருந்த விவேகா னந்தரிடம் போய் சேர்ந்து திருக்கண் நோக்கத்தால் அநேகரை

சைவ சமயத்தில் சேரும்படி செய்துவைத்து தன்னை யின்னாரெனத் தெரிந்துகொள்ளாதபடி நமது குருநாதனின் தன்மையை யோசிக்குமளவில் இதுவும் ஓர் பணியெனக் கருதியதேகாரணமாகும். அமெரிக்காவிலிருந்து காசிவந்து சிலநாளிலிருந்து தென்திசைக்கேகி சித்தர்கள் தெரிசனம் செய்துவரவேணுமென எண்ணங்கொண்டவராய் உலகோர்களுக்கு நன்மை செய்துவந்து கொல்லிமலைக்குப் போய் அரப்பளீசுரரை தெரிசித்து அருள்பெறவேணுமாய் வந்தவர் மலைகளிலுள்ள விபரங்கள் பூரா தெரியவேணுமாய் நிஷ்டையிலிருந்தார்.

37. கொல்லிமலை வாசம்

நிஷ்டை மூலமாக தூரதிஷ்டையாலறிந்து கொல்லிமலை சென்று அங்குள்ள கற்பமூலிகைகள் 108ல் முக்கியமானவைகள் நீலக்கொடிவேலி சோதிவிருட்சம் கருநெல்லி கருத்தநொச்சி முண்டனி வாகவேதிசெந்தாடுபாவை கருத்தக் கரிசலாங்கண்ணி கல்தாமரை கணைவிருட்சம் அவைகளில் முக்கியமானவைகளையும் கணைவிருட்சப்பால் சித்தர்களால் கொடுத்ததையும் சாப்பிட்டு கொஞ்சநாளிலிருந்து விரும்பியவற்றை செய்துமுடித்துக்கொண்டு அங்கிருந்து பொதிகை வரும் வழியில் சித்தர்களிருக்கும் மலைகளிற் சென்று தரிசித்து குற்றாலம் பாபவிநாசம் முதலிய சேத்திரங்களைத் தெரிசித்தும் அகத்தியர்பால் அன்புகொண்டவராய் பொதிகைமலைகளில் 5. 1 அகத்தியர் பொதியை, 2 திருமூலர் பொதியை 3 சட்டமுனி பொதியை, 4 தன்வந்திரி பொதியை. 5 தேரையர் பொதியை என்பவைகளில் அகத்தியர் பொதியைக்கு செல்வதற்கு அகத்தியால் அனுமதிபெற நினைத்து வானதீர்த்தம் ஞானநிஷ்டைக் குகையில் காத்திருந்தார்.

38. பொதியை அகத்தியர் அருள்பெறல்

அகத்தியரும் சுவாமி அவர்களின் எண்ணத்தைப் பூர்த்தி செய்யக் கருதியவராய் தனது சீடர்களை வான தீர்த்தம் ஞானநிஷ்டை குகையில் காத்திருக்கும் முத்துக்குமாரசாமியை கூட்டிவாவென அவர்கள் வந்து அழைத்துச்சென்று வந்திருக்கிறார் என வரும்படி செய்து ஆசீர்வதித்து கதிர்காம வேலப்பன் திருவருளாலும் பால்குடி

பாவாவின் திருநோக்கத்தாலும் பெற்றவைகள் யாவமறிந்தோம் மற்ற நான்கு பொதியை தன்மையும் சித்தர்களிருக்குமிடம் தெரிவித்து என்றுமழியாதவரம் இறைவனுல் கிடைத்தும் உலகிற்கு சில தொண்டுகள் செய்யவேணுமென்றும் கூறினர். உமது குருவும் உனக்கு சீடன் வேணுமெனக் கட்டளையிட்டார் என்னைத் தரிசித்த தால் எல்லாச் சித்தர்களும் உமக்கு வேண்டியதை செய்வார்கள் கோறிய சித்திபெறுவாய் என்றும் சதுரகிரிபோய் அங்குள்ள மகாலிங்கம் சுந்தரம் பலாவடியான் காலாங்கிநாதரால்சித்தர்களுக்கு வைத்திருக்கும் தைலக்கிணறு முதலியவைகளும் கோரக்கர்குண்டா சித்தர்களிருக்குமிடம் பல குகைகளுக்குப்போய்கண்டு தெரிசித்தும் சந்தன மகாலிங்கா பெருமையும் கூறி ஆசீர்வதித்தார் சுவாமி அவர்களும் விடைபெற்று சதுரகிரியைத் தெரிசிக்கப் புறப்பட்டார்.

39. சதுரகிரியில் சீசனிருக்குமிடமறிதல்

அகத்தியரிடம் விடைபெற்றுவரும் சுவாமி அவர்கள் சதுரகிரி வந்து அங்குள்ள கோரக்கர்குண்டா முதலான தீர்த்தங்களையும் சித்தர்களுக்கு கஞ்சா கடைந்துகொடுத்த குண்டாவையும் பார்த்து அகமகிழ்ந்து காலாங்கிநாதர் போகரைப் பார்த்துவரும்படி சொன்னது போல் நமது குருநாதனும் பார்த்து வரும்படி சொன்ன பெருமையை வியந்து பல குகை முதலியவைகளிற் சென்று அங்குள்ள சித்தர்களைத் தெரிசித்தும் தனக்கு வேண்டியதைப் பெற்றுக்கொண்டு பலாவடியிலிருக்கும் காலாங்கிநாதர் சித்தர்களுக்காக வைத்திருக்கும் தைலக் கிணற்றையும் பலாவடி கருப்பண சுவாமியையும் தெரிசித்து சுந்தாம் மகாலிங்கம் என்றும் இரண்டு மூர்த்திகளையும் தெரிசித்து சுந்தாம் சந்நிதிமுன்னிருக்கும் சவுக்கையிலிருக்கும் திருக்கூட்டத் தலைவர் முதலியவர்களைப் பார்த்து இதன் தன்மை யென்ன வென்று விசாரித்தளவில் மகாலிங்கம் (குரு) சுந்தரம் (சீசர்) சீசரின் பாம்பரை திருக்கூட்டத் தலைவர் ஒவ்வொரு வருஷம் அம அமாவாசைக்கும் வந்திருப்பார் என அப்போது தன் குருவின் கட்டளைப்படி நமக்கும் சீசன் வேணுமென்ற ஞாபகம் வர அதற்கு தக்க பக்குவமுள்ள சீடன் யாரென தூரதிஷ்டியாலறிந்து சதுரகிரி சுந்தா மகாலிங்கம் திருப்பரங்குன்றம் முருகனுக்குத் தொண்டனுகிய திருமங்கலம் தாலுகா பண்ணிக்குண்டு மு. க. குமாரசாமி செட்டியார் என்னும் பண்ணையார் புத்திரன் சுந்தரமகாலிங்கம் என்று

தெற்கு இல்லத்திற்கு சிதம்பர சுவாமி என்பவரையும் கூட்டிக் கொண்டு வந்தார்.

40. பண்ணிக்குண்டு குமாரசாமியை ஆட்கொண்ட வைபவம்

1908 கீலக ஞு ஆடி மீ அமாவாசை 5வது நாள் சுவாமி அவர்களின் 80வது வயதளவில் சீஷனிருக்குமிடம் தானேவந்து பெற்றோரைத் தன்வயமாக்கக் கருதியவராய் தெற்கு இல்லத்திற்கு வரவே முத்துக்கருப்பம்மையார்என்னும் தாயாரும் பண்ணையார் என்னும் தந்தையாரும் தண்டம்போல்விழுந்து வணங்கி நிற்க திருநோக்குற்றளவில் அஞ்ஞானயிருள்நீங்கினவராய் தந்தையாகிய(குமாரசாமி) அடியார்களுக்கன்னமளித்தலன்றி பணிசெய்யும் வழக்குமில்லாதவர் சுவாமி அவர்களுக்கும் கூடவந்த சிதம்பர சுவாமிகளுக்கும் தனித் தனி உயர்ந்த ஆதனமியற்றியதிலமரும்படி செய்வித்து மேல் வேட்டியை இடுப்பில் கட்டிய பயபக்தியுடன் உபசாரங்கள் செய்து கொண்டிருக்கும்போது சுவாமி அவர்களைப் பார்த்தளவில் ஆனந்தக் கண்ணீர்ததும்ப தண்டம்போல் விழுந்து வணங்க அகமகிழ்ந்து விபூதி பிரசாதம் கொடுத்து சிரஞ்சீவியாக யிருப்பாய் என ஆசீர் வதித்தார் மாருந்தை சுப்பிரமணிய முதலியார் சமீபத்தில் அருட்குரு வாய் வந்து உபதேசிப்பார் என்றார். சுவாமி அவர்கள் சங்கியாசி போலவும் சிதம்பரசுவாமி வானப்ரஸதர் போலவுமிருப்பவர்களைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். அப்போது எனது தந்தையம் 2 நாளைக்கு இருக்கவேணுமாய் கேட்கயிசைந்து என் முகம் நோக்கி:

இடைக்காட்டூர் சித்தர் பாடல்

தாண்டவக்கோனுக்கு நாராயணக்கோன் கூறல்

கொச்சக்கலிப்பா

சீரார் சிவக்கொழுந்தைத் தெள்ளமுதைச் செந்தேனைப்
பாராதி வான்பொருளைப் பஞ்சஉரு ஆனஒன்றை
பேரான விண்ணொளியைப் பேரின்ப வாரிதியை
நேராக எந்நாளும் நெஞ்சுஇருத்தி வாழ்வேனே

கண்ணுண்மணியைக் கற்பகத்தைக் காஞ்சனத்தைப்
பெண்ணுருவிற் பாதியினைப் பேசரிய முப்பொருளை
விண்ணினமுதை விளக்கொளியை வெங்கதிரைத்
தண்ணளியை யுள்ளில்வைத்து சாரூபஞ்சாறுவனே

கன்னித்தரு

மனமென்னு மாடடங்கிற்றாண்டவக் கோனே—முத்தி
வாய்த்த தென்றெண்ணேடா தாண்டவக்கோனே

சினமென்னும் பாம்பிறந்தாற்றாண்டவக்கோனே—யாவஞ்
சித்தியென்றே நினையேடா தாண்டவக்கோனே

ஆசையெனும் பசுமாளிற்றாண்டவக் கோனே—இந்த
அண்டமெல்லாங் கண்டறிவாய் தாண்டவக் கோனே

ஓசையுள்ளடங்க முன்னர் தாண்டவக்கோனே—மூலத்
தோங்காரங் கண்டறி நீ தாண்டவக்கோனே

மூலப் பகுதியறத் தாண்டவக்கோனே—உள்ளே
முளைத்தவேர் பிடுங்கேடா தாண்டவக்கோனே

சாலக் கடத்தியல்பு தாண்டவக்கோனே—மலச்
சாலென்றே தேர்ந்தறி தாண்டவக்கோனே

பற்றே பிறப்புண்டாக்கும் தாண்டவக்கோனே—அதைப்
பற்று தறுத்துவிடு தாண்டவக்கோனே

சற்றே பிரமத்திச்சை தாண்டவக்கோனே—உன்னுள்
சலியாமல் வைக்கவேண்டுந் தாண்டவக்கோனே

அவித்தவித்து முளையாதே தாண்டவக்கோனே—பத்தி
அற்றவர் கதியடையார் தாண்டவக்கோனே

செவிதனிற் கேளாதமறை தாண்டவக்கோனே—குரு
செப்பில் வெளியாமல்லவோ தாண்டவக்கோனே

கட்டளைக் கலித்துறை

மாடுமனைகளு மக்களுஞ் சுற்றமும் வான்பொருளும்
வீடும்பணிகளும் வெம்பொன்னுஞ் செம்பொன்னும் வெண்கலமும்
காடுங்கரைகளுங்கல்லாம் பணியுங் கரியரியுங்
தேடும்பல பண்டமு மில்லா சிவகதிசேர்மின்களே

நேரிசை வெண்பா

போகம்போம் போக்கியம்போம் போசனம்போம் புன்மைபோம்
மோகம்போம் மூர்க்கம்போம் மோசம்போம்—தாகம்போம்
வேதமுதலாகமங்கள் மேலானதென்று பலகால்
ஓதும் பிரமத்தையுற்றக்கால் என்றும்

உபதேசக்கிரமத்தன்மை பெருமையுமுள்ள கந்தாலங்காரம் காப்பு: 1 9 10 16 19 23 27 33 38 39 47 60 70 84 86 95 104 கந்தானுபூதி காப்பு: 1 7 10 11 15 20 28 41 42 43 47 48 49 51 பாடல்கள் கூறி வேதாந்த சித்தாந்தசாஸ்திர விசாரணையாலும் ஈஸ்வர பக்தியும் சீவகாருண்யம் ஒற்றுமை சீலம் தொண்டுபுரிவோர்க்கு குருசேவை கிடைக்கும் குருபக்தியால் முத்தி கிடைக்கும் எனக் கூறினர்.

அன்று மத்தியானம் இரவு ஆகாரங்கள் எனது பெற்றோர் களால் செய்வித்து அவர்களும் சுவாமி அவர்களிடம் நன்மொழி கேட்டு ஆனந்தமுற்றார்கள்.

அன்று இரவில் எனது தகப்பனர் சுவாமிகளிருவரையும் வடக்கு மேல்மாடியில் அவர்களுக்கு படுக்கை வசதி செய்துவைக்க வேணுமானதால் உன் மனைவியை இவ்விடத்திலிருக்கச்சொல் என அவ்விதமிருக்கச் சொல்லி சுவாமிகளிருவருக்கும் உபயோகப்படுத் தாத மெத்தைகள் தலையணை கொடுத்தார் அதனை தனித்தனி படுக் கைகளமைத்து அழைத்துப் போக மெத்தையில் படுத்துக்கொண் டார்கள். சுவாமி அவர்களின் பக்கத்தில் நின்றுகொண்டிருக்க அருகிலிருத்தி குகைவாசமென்றும் ஒரு காரணார்த்தமாய் வந்ததாக வும் கமுகு மலைக்குப் போகவேண்டியதிருக்கிறதென்றும் பாதங்கள்

நோகிறதென மலரடிகள் சாந்திபெறச் செய்து தொண்டுசெய்யக் காத்திருக்க அப்பா உனக்கு உபதேசிக்க வந்தோம் அதற்கு நாள் நாளையே நன்னாள் இரவு ரூபாய் ஒன்றுக்கு சூடன் வேணுமெனச் சொன்னார்.

41. தொண்டனுக்கிய வைபவம்

இடுதலைச் சற்றுங்கரு தேனைப் போதமிலேனையன்பாற்
கெடுதலிலாத் தொண்டரிற் கூட்டியவா—கிரௌஞ்சவெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவியறவிச் சிறை
விடுதலைப்பட்டதுவிட்டது பாசவினை விலங்கே—(கந்தரலங்காரம்)

அருட்குருசாமி அவர்கள் (சுந்தரமகாலிங்கம்) 16வயதளவில் தொண்டனுக்க வந்தமையால் தகப்பனாரும் விவாகமாகி 10 மாதம் சென்ற மனவியைப் பிரிந்துபோகச் சொன்னார் சுவாமி அவர்களும் தொண்டுசெய்வதைப் பார்த்து அகமகிழ்ந்து பாதசேகரனுக்கினர் (தொண்டனுக்கினர்)

கண்டோருஞ் சொல்லார் கருத்தார் பெரியோரைத்
தொண்டுசெய்து பெற்றசுகம்—காகபுசுண்டர் குறள்

42 அருட்குரு உபதேசித்த தன்மை

பூசையால் விரதந்தன்னுற் புண்ணிய தீர்த்தந்தன்னல்
ஆசறுதருமந்தன்னல் அளவறு வேள்வி தன்னற்
பாசபந்தங்கள் பொன்ரு பாரிடை நம்போல்வந்த
தேசிகனருளுஞான தீக்கையால் பொன்றுமன்றே
(வள்ளலார் ஞானதீக்கை யிலக்கணம்)

சுவாமி அவர்கள் கூறிய பிரகாரம் மறுநாள் இரவு தீபம்ஏற்றி வைத்து ஒரு தாம்பாளத்தில் விபூதி குங்குமம் சூடன்வைத்து சுவாமி அவர்களை வணங்கி மனதால் உபதேசிக்கவேணுமாய் நின்று கொண்டிருக்க தட்சணாமூர்த்தமாயமர்ந்து வடக்குமுகமாக உட்காரச் சொல்லி என் முகம் நோக்கி சூடன்ஏற்றி துரியநிலையிலிருக்கும்படி திருநோக்கால் உபதேசித்து (எல்லாம் சொல்லாமற் சொன்னேம்

எல்லாச் சித்தியும் முத்தியும் கிடைக்கும், என எழுந்துவணங்க விபூதி பிரசாதம் கொடுத்தார் அகமகிழ்ந்து நெற்றியிலணியவும் மனம் அசைவற்று நின்றது (சும்மாயிரு) என்றார் முன்உட்கார்ந் திருந்தயிடத்திலமர்ந்து பத்மாசனம் போட்டு சரீரமசைவற்றுக் கண்மூடியிருக்க சோதி தரிசனம் சிலம்பொலிச்சத்தம் நடராஜநர்த்தனம் முறையேகண்டு அன்றிரவு முழுவதும் பேரானந்த முற்றிருந்தது (துரியம் சற்குரு மூர்த்திசெய்யும் உபதேச வலிமை யால் மெய்ப்பொருள் உணர்ந்து பரம்பொருளே தானாகும் ஜீவன் முத்திநிலை.

அகத்தியர் சூத்திரம் 800 பாடல் 94, 95ல் பராபரத்தில் ஒன்னுருவாய் பாய்ந்தேபோச்சு எனக் கூறுவது ஐக்கியமாகிவிட் டது என்பதாம்.

43. அருட்குரு எல்லாம் தன்னாலே வந்துசேருமென்றது

அன்று இரவு முழுமையும்துரியநிலையிலிருந்ததால்மூவாசையு மறந்து மூன்றாம்நாள் கழுகுமலைக்குச் சுவாமி அவர்களுடன் போக வேணுமென்று கிழக்கே ஒருகல் துலைவிலிருக்தும் புலியூர் பாரைக்கு வந்து காத்திருக்க தென்புறமிருக்கும் ரோடு பாலத்திற்கு சுவாமி அவர்கள் வரவே தாய் தகப்பனார் வந்து வணங்கி புத்திரனை அனுப்பிவைக்கவேணுமாய் கேட்க என்முகம் நோக்கி அப்பா எல் லாம் தன்னாலே வந்து சேரும் (40) வது ஆண்டில் வந்து வேண்டு வன செய்துவைப்பதாகக் கூறி விபூதி பிரசாதம் கொடுத்தனுப்பினார் வீடுவந்து தாய் தகப்பனார்கூறும் ஏவல்களை செய்துகொண்டிருக்கும் போதும் அந்நிலை மாறாமலிருந்தது.

44. அருட்குருவின் திருநோக்கால் பெற்றநிலை

குருவாக்க முதமெனக் கொண்டுவந்த சீடன்
குருவாக்கையன்றி மற்றைக்கொள்ளான்—குருவாக்கால்
உயர்ந்தோமென்றிந்த உலகறியப்பன் முறையும்
தொந்தோ மென்றடித் தொழும் (வள்ளலார் ஞான விளக்கம்)

அருட்குருசுவாமி அவர்கள் (சும்மாவிரு) என்றுசொன்ன தைப்போல் திருச்செந்தூர் முருகன் சிற்றம்பல நாடிகளை

சும்மாவிருக்கச் சொன்னதோர் வார்த்தை
அம்மாயதிசயம் ஆருடன்புகல்வேன்—முதலாக

திருமலிசெந்தூர் சேவற் பெருமான்
நிருமல ஞான நிகழ்த்தியாட்கொண்டது—ஈறுக

திருச்செந்தூரகவலில் தான்பெற்றபேறு கூறுகிருர்
4 குரு கிருபையில் நன்கு விளங்கும்.

45. எல்லாந்தன்னுலே வந்துசேர்ந்த விபரம்

சூத்திர நம்முடற் சக்கரமேருவைச் சுற்றியரை
மாத்திரையிற் சந்திரசூரியர்போல் வரும் வாசிதனைக்
காத்திரவாய் மட்டியோகத்திருந்துங்கருமவுனச்
சாத்திரங்கை வருநின்று றேழுத்துந்தரி செஞ்சர்க்கே

—ஆறெழுத்தந்தாதி

1 சாத்திரகிருபை

சீதக்களப அகவல் ஆறெழுத்தந்தாதி திருச்செந்தூரகவல் பதினெண்கீழ்கணக்கு திருக்குறள் ஔவைகுறள் நல்வழி பரமானந்ததீபம் நீதிநெறி விளக்கம் பன்னிரண்டு திருமுறை பதினுங்கு சித்தாந்தசாத்திரங்கள் வள்ளலார் சாத்திரம் (20) ஹடயோகப் பிரதீபிகை சிவயோகப் பிரதீபிகை ஞானப்பிரகாசதீபிகை வேதாந்திர சாஸ்திரம் 16 யோகசூத்திரம் ப்ரஹ்மசூத்திரம் பகவத்கீதை உத்தரகீதை குருகீதை தேவி கீதை சூதசம்ஹிதை ஆதிசங்கராச்சாரியார் நூல்கள் 20 வரையும் ஸ்ரீருத்திரம் புருஷசூக்தம் முதலியன ஜனத்ஸுஸா தீனம் தட்சணமூர்த்தி தோத்திரம் உரை மெய்யெழுத்து (க) முதல் (ன) வரை நந்தீசர் திருமலர் போகர் அகத்தியர் சட்டமுனி கொங்கணர் இராமதேவர் சுந்தரானந்தர் கருவூரார் பிரமமுனி மச்சமுனி உரோமர் இடைக்காடர் பிண்ணுக்கீசர் கோரக்கர் வாசமுனி கமலமுனி அழுகண்ணர் முறையே 18 சித்தர்கள் உயிரெழுத்து (அ) முதல் (ஃ) வரை வசிட்டர் சூரியானந்தர் சட்டோணரிஷி யூகிமுனி காகபுசுண்டர் குருராஜர் தேரையர் பதஞ்சலியார்

புலத்தியர் கடைப்பிள்ளை கூர்மானந்தர் திருவள்ளுவர் சுப்பிர மணியர் முறையே 13 சித்தர்கள் இவர்கள் நூல்களும் கோர்வை நூல்களும் ஒளவையார் கைலாசம் சென்றதும் அருணகிரிநாதர் பாரிசாதம் கொண்டுவந்ததும் துருவன்பெற்ற நிலைகூறும் விருசை நூல்களும் புவனைக்கக்கிஷம் நவக்கிரகக்கிஷம் முதலியனவும் இரஸ ரத்தின சமுச்சயம் திருவாடுதுறை ஆதீனம் ஆதிநமச்சிவாயமூர்த்தி பிரதம சீடர் சிவபாத சுவாமிகள் இரஸமணி நூல் இரஸலிங்கம் செய்முறை பூசிக்குமுறைகளும் 9 வகை இரஸவமணிகளும் ஐதராபாத் இராமஸூமஸ்தான் யோகிகளும் போகிகளும் வேண்டுவன அடைவதற்கு இரஸமணி செய்முறை நூல்களும் இதிகாஸ புராணாதி களும் கிடைத்தன.

2 அந்தக்கரண கிருபை

ஆண்டு பனிரெண்டுக்கும் வேறே சித்தம்
ஆகாமற் சேகரித்து பல நூலெல்லாம்
பூண்டிருந்து பார்த்தாக்கால் குருத்தானுகிப்
புத்தியெனு மறிவதனுலெய்து மெய்தும் (உரோமகுருநூல் 50)

1 மானிடரில் சித்தராக சிவயோகியாக சரியை கிரியை முதலியன.

2 சித்தராகவேண்டிய வயதும் சோதிதமர் வாசல் திறக்கும் காலமும்.

3 சீடனுக்கு உபதேசிக்கும் முறை இருவகை விபரம்.

4 சித்தி 25க்கு விபரமும் அதையடையுமாற்கங்களும் தன்மையும்.

5 சாரகாரத்துறை ஆறும் அதன் பரீட்சை விபரமும்.

6 சிவதீட்சை 11 சத்தி தீட்சை 11 மந்திங்களும் அதனு லேற்படும் சித்தி முத்தி விபரங்கள்.

7 பஞ்சகண தீட்சை விபர முதலியனவும்.

8 சிவன் முதலோர் கற்பங்கொண்டவர்கள் 50 பேர்கள் பெயரும். கற்பங்கள் 108 பெயரும் கற்பமுண்ணும் விபரமும்.

9 சித்தர்கள் காயசித்தி பெறவும் கடவுளடி சேரவும்செய்த பூசை முதலியனவும்.

10 புவனை ஓமத்தால் ஆயுள் பிரமானம் யந்திரபூசையால் ஏற்படும் பலன்கள்.

11 காயத்திரி ஓமத்தால் மூன்று காலத்திலும் செய்யும் செபம் உபாஸனையால் ஆயுள்பிரமாணம் முதலியனவும்.

12 சிவயோகத்தால் அமிர்த தாரணையும் ஆயுள்பிரமானமும்.

13 ஸர்வ சித்தியளிக்கும் கர்மவிசாரம் 3 வகையும் செய்யும் விதமும்.

14 பஞ்சாக்கினி வித்யை 1 தேவாயனம் 2 பிதிர்யான 3 இரண்டு மற்ற மார்க்களால் பலவகை சென்மங்கள் பிறக்கிறவைகள்.

15 சட்டமுனி கூறும் 108 கற்பங்களின் பெயரும் அதன் தன்மையும்.

16 கருவூரார் கூறும் 108 கற்பகங்களில் சாப்பிடுவதற்கு வேண்டிய அனுப்பாளங்களும் அதனாலேற்படுஞ்சித்தி களும்.

17 மகாமூலிகை 64 அதில் 45 32 27 23 17 10 இவை கிடைக்காவிடில் உலகோர்க்கு சரக்குகள் 9ம் அவைகள் பெயரும் தன்மையும்.

18 18 சித்தர்களில் நவசித்தர்கள் பெயரும் ஏழு சித்தர்கள் பெயரும் தனித்த சித்தர்கள் இரண்டும் இவர்கள் கைலாயவர்க்கத்தார் மூவர்க்கத்தார்கள்.

19 சித்தர்கள் கூறும் நூல்களில் கருப்பேற்றவேண்டிய மூலிகை 27 அதன் பெயரும் கருப்பேற்றவேண்டிய விதமும்.

20 புல்லுருவிகள் 44ம் அதன் பெயரும் அதன் பிரயோசன மும் எடுக்கவேண்டிய காலம் உபயோகிக்கும் விதமும் பலனும்.

21 சித்தர்களில் 64 மடாதிபதிகள் 64 சமய குருக்கள் பெயரும் 18 சித்தர்கள் பெயரும் சாதி முதலியனவும்.

22 கணபதி சுப்பிரமணியர் ஈசன் சத்தி சண்டிகேசர் வயிரவர் 6 தேவதையும் அறு கோணத்தில் இடகலை பின்கலை சுழிமுனை மூலாதாரம் இருக்குமிடமும் ஒவ்வொன்றிலும் மூன்று சித்தர்கள் வீதம் 18 சித்தர்களிருக்குமிடமும்.

23 பதினெட்டு சித்தர்கள் சாதகமுதலியனவும் கிடைத்தன.

3 ஈசுரகிருபை

ஆண்ட பராபரமருளுந் தொழிற்கெல்லாம்
பூண்ட கணேசன்புகலுங் குருவீசன்
நீண்டயென் தாயாரியல்பாம் வயிரவன்
காண்டிவையைங் துங்களங் கற்றுபூசியே (திருமூலர் 500)

1 கணேசரால் தடையற்ற காரிய சித்தியும் குருபாதமடைதலும் யோகம் என்கிற தியானம் உண்டாகும்.

2 குரு சண்முகப்பெருமானுல் யத்தனமின்றிஎல்லாச்சித்தியும் உண்டாகும்.

3 ஈசன் மஹாதேவருடைய பிரஸாதத்தால் முத்தி கிடைக்கும் தான் சிவனேயாவன்.

4 தேவியின் கிருபையால் எல்லா ஐஸ்வரியமும் சீவன் முத்தி சடத்தின் முத்தியுமுண்டாகும்.

5 வயிரவரால் மருந்து சித்தி காய சித்தியுமுண்டாகும்.

6 சண்டிகேசுரரால் வாத சித்தியும் ஈசுரன் அனுக்கிரமும் உண்டாகும்.

7 சூரியனுல் திரேக செளக்கியமும் சத்துருவெற்றியுமுண்டாகும்.

8 சந்திரனுல் கீர்த்தியும் சரீரபெலமும் உண்டாகும்.

9 ஓம அக்கினியினுல் அளவற்ற ஐஸ்வரியமும்நீண்டகாலமிருக்கச் செய்யும்.

10 துர்க்காதேவியினுல் எல்லாயிடத்திலும் ஜயமுண்டாகும்

மஹாதேவர் (ஈசன்) பிரஸாதமடைய குருபாதபூசை செய்யுங்கள் எனக் கூறுகிறது.

காக்புசுண்டர்

முத்தியென்ன தெய்வமதைக் காணல் கூடல்
மோகித்துக் கூடியுறவாடித் தானே
சித்தியென்ன பொருளிருந்த தெய்வலாபம்
தெய்வத்தின் பொருளல்லோ சித்திபப்பா
சத்தியென்ன யிவ்வாடல் பொருள்களெல்லாம்
தானீய வாங்கியவர் முனிவரானர்
கத்தியென்ன காணர்கள் அருளுங்காணர்
கைப்பிடியாய் பிடித்தாரே சித்தர்தானே

1 பண்ணிக்குண்டு விநாயகருக்கு சீதக்களப அகவலால் அர்ச்சனை செய்யும்போது துதிக்கையால் புஸ்பத்தை வாங்கினதாகக்கண்டது.

2 வையூரில் ஆறெழுத்தந்தாதி முருகர் வணக்கம்செய்ய ஒரு ஆண்டியாகவந்து கைதட்டிஆடினதைக் கண்டது.

3 பண்ணிக்குண்டு வீட்டில் வயிரவர் நிர்வாணமாய் நின்றாடினது.

4 அநேக சித்தர்கள் வந்து என்றைக்கும் அழியாத வரம் கொடுத்தோம் காயசித்தி முதலிய எல்லாச் சித்திகளும் பெறுவாய் என்றும் அவர்களில் ஒருவரை என்னிட மிருந்திவைத்துயிருவரும் கூடயிருக்கக்கண்டது.

5 நவராத்திரியன்று தேவிவந்து தட்டி எழுப்பி பூசை செய் என்று சொன்னபிரகாரம் 16 நாள் செய்தது.

6 பழனியாண்டவர் வந்து தன்னிடம் வரும்படி சொல்லிய பிரகாரம் போய் தெரிசித்தது.

7 சிதம்பரம் நடராஜர்வந்து தன்னிடம் வரும்படிசொல்லிய பிரகாரம் போய் தெரிசித்தது

8 4-வது ஆண்டில் நவராத்திரி காலத்தில் பராசக்தி மூவாசையுமறந்தும் மாதர்களை தாயாக நினைத்தும் சத்துமித்துரு சமமாக எண்ணியும் காமமாதி அகங்கா ரங்களை நீக்கவேணுமென்றும் அதன்படி நடந்துகொள்வ

தாகச் சத்தியம் செய்யென அவ்விதம் செய்ய பராசக்தி மடியில் தூக்கி வைத்ததாகக்கண்டது.

9 6வது ஆண்டில் நவராத்திரி காலத்தில் அமிர்தபானங் கொடுத்து அநேக தொழிகள் சொல்லிவைப்பதாகக் கூறியது.

10 12வது ஆண்டில் கிரியை பூசை முடிந்துவிட்டதென்றும் தேங்காய் பழம் வாங்கும் துட்டுக்கொடுவென்றும் மாம்பழம் வாழைப்பழம் சாப்பிடக்கூடாதென்றும் உன் மூக்குக்கும் என் கண்ணுக்கும் மத்தியில் பார் என்றும் நான் தூங்காமல் அதிசயம் பார்த்தேன். நீயும் தூங்கா மலிருந்தால் அதிசயம் பார்ப்பாய் என்றும் அதன்படி தூங்காமலிருக்கயுபாயம் கூறியது.

4 குருகிருபை

காகபுசுண்டர் 1000 பாடல் 217—218

காணுங்காண் ஞானவொளி கோடி சூரியன்
கதிர்விட்டுத் தானெரியுந் தூரந் தோற்றும்
பூணுங்காண் உச்சியொழி புருவப் பூட்டு
பூட்டுடைக்க வல்லவரே வாருங் காணும்
தோணுங் காணுங்களுக்குத் தூர திருஷ்டி
சொற் பலிக்குந்திரி காலவர்த்தஞ் சொல்லும்
நாணுங்காண் கர்மவினை தர்ம மாகும்
நரை மூப்பு சாக்காடேது காணலாமே

காணலாம் எத்தனையோ கோடா கோடி
கண்ணுக்குள்ளே தெரியுங் கிருஷ்ணனைப் போல்
தோணலாம் எதிர் நிற்கும் பாவனைபோல்
துயரெல்லா மாற்றிவிக்கும் சுழினை வாசல்
வீணல்லால் மற்றதொன்றிர் காண்ப துண்டோ
மிஞ்சினவர் சொற்கேட்ட வார்த்தை போல
நானில்லா வில்லெறிந்த வீரன் போல
நாமறியத் தம்மை விட்டு நாடினாரே

இதன் தன்மையை 219 220 221 222ல் விரிவாய்க் காணலாம்.

நெற்றிக்கண் திறந்தோர்கள் 786 முதல் 790 வரை பெயர் காணலாம்.

சட்டமுனி 200ல் 84 85

தானென சம்பிறுட களையைக் கண்டால்
தாரையாய் ஓடுமடா அமுதந் தானே
தானென அமுதமுண்டால் காய சித்தி
தப்பாது மண்டலத்தில் மருந்து வேண்டாம்
வாறென திவ்வளவும் யோக மாற்கம்
வந்தாக்கால் எட்டெட்டுஞ் சித்தியாகும்
கோனென யோகத்தில் அமுதம் உண்டு
கோடியிலே ஒருவனடா கூர்ந்து கேளு
ஊனென காயத்தை சித்திபண்ணி
ஓடினவர் வெகு கோடி. யுரைக்கிறேனே

காகபுசுண்டர் 1000ல் 470 குருபத்தியால் 65 சித்தி

அறுபத்துநால் விதமும் மேன்மை யோர்க்கு
ஆகாதோ புத்தி யுள்ளோராகி னுக்கால்
குருபத்து வைத்திருந்தால் அறுபத்து நாலும்
கூடாதோ அறுபத்து நாலுந் தானே
மருபத்து வந்திடுமே அறுபத்தையந்தாய்
மாவுடலம் பெலத்திடுமே சுகமாம் வீடு
திருபத்து வைகுண்டங் கயிலா சங்கள்
சேர்ந்திருக்கும் இக் கூட்டில் அள்ளலாமே

குருபத்தியின் பெருமையை 471 முதல் 488 வரை விரிவாய்க் காணலாம்.

அருட் குருகிருபையால் கண்டகாட்சிகள் பின் வருமாறு

1 சத்திரப்பட்டி நாறுயணசாமியும் வேரொருவரும் திருவண்ணுமலை அக்கினி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய் வதைக்கண்டது.

2 குண்ணத்தூர் சன்னச்சாமி அவர் வீட்டில் யோசனை செய்துகொண்டிருப்பதைக் கண்டது.

3 எழுபத்தீராயிர நாடிகளும் பஞ்ச பூதங்களும் நடக்கும் தன்மை தெரிந்தது.

4 பண்ணிக்குண்டு ஆ. முத்திருளாயிக்கு பின் இருந்து சந்திரன் 2 இருக்கும்படி காட்டியது.

5 தங்கை மீனாட்சி காது என்காதுடன் ஒட்டும்படி செய்து தசநாதங்களும் கேட்கும்படி செய்தது.

6 அண்டம் அடங்கிய பெரியஒளி வீசி ஓங்காரத் தம்பம் நின்றது.

7 சதுரகிரியிலிருந்து ஒரு சித்தர் குகை காட்டி வாவென அழைத்தது.

8 தச நாதங்களும் தன்முக தெரிசனம் பஞ்சாட்சரங்கள் மால்மயே சுரன்வீடு நடராஜ நர்த்தனம் 12 கால்புரவியும் வெட்ட வெளியும் அதற்குமேல் ஊஞ்சலில் அநேகருடன் தானும் படுத்திருக்கக்கண்டது.

9 தண்ணியில் தன்முகம் பார்க்கத் தெரியாமலிருந்தது.

10 மூலத்திலிருந்து ஒரு பெரிய கம்பத்தில் வலஞ்சுற்றுகச் சுற்றிக்கொண்டுபோய் இரண்டு சிவப்புக் குதிரையில் இரண்டு வெள்ளை மனிதன் ஏறிச் சவ்வாரி செய்து நெடுந்தூரம் போனபின் வலம்புரி சங்குச் சுத்தாகப் போக அங்கே யோகதிலதம் வைத்திருக்கிற ரிஷி கூட்டங்களுடன் நடருஜ நர்த்தனம் கண்டது.

11 அருட்குரு நிஷ்டை சின் முத்திரையுடன் காட்டியது.

12 மூலாதாரத்தில் குண்டலிப் பாம்பு மேலெழும்பும் தன்மை கண்டது.

13 சிலம்பொலிச் சத்தம் தச நாதங்களுமுண்டாகி பச்சை சிவப்பு கண்ணடங்காத பெரிய ஒளிவீசி பரவெளியில் தானும் தன்னுள்ளே பரவெளியுமிருக்கக்கண்டது.

மேல்கண்ட நான்கு கிருபையும் எழுதியிருக்கிறது அருட்குருவின் கிருபையால் கண்டவைகள் கண்டு வரும்காட்சிகள் அளவிடற்கரிதாகும். இவை போதுமென நிறுத்தினேம் இதுவும் அருட்குருவின் மகத்துவம் பற்றி கூறினேமேயன்றி வேறில்லை.

ஏதேனு செய்தாலும் ஏதேது சொன்னலும்
ஏதேது சிந்தித்திருந்தாலும்—மாதேவா
நின்செயலே என்று நினதருளாலே யுணரில்
என்செயலே காண்கிலேனே—சிவபோகசாரம்

காசியிலிறக்க முத்தி—கமலையிற் பிறக்க முத்தி
தேசுறு தில்லை மன்றுட்டெரிசிக்க முத்தியென்பர்
ஆசையை யிறக்கமுத்தி—ஆருயிர்பிறக்க முத்தி
ஈசனைக்காண முத்தி எதுஅரிதான முத்தி

இத்திறனருள் கைப்பற்றியுயிர்கெலாம் இதத்தைச்செய்க
சத்தியம் இரக்கம் இன்றேன் முத்தியைச் சாராகும்
பத்தியால் யோகஞ்சாறும் யோகத்தால் பரமஞானம்
சித்தியாம் இதற்காதாரம் சீவகாருண்ய மென்றே

5 தியாகபில்சுனசட்டி (ப்ரஞானசபை)

தத்துவஞான சபை

எனது அருட்குருவின் கிருபையால் 1914ஹூத்தில் ஹிமாசலம் சித்தர்களின் கூட்டம் ஆக்ஞைப்படி நடந்துவருவதான மதுரை ப்ரஹ்மக்ஞான சபையில் ஒரு அங்கத்தினராகயிருந்து 1916ஹூ அனிபிசெண்டு அம்மையார் மதுரைவந்தபோது அவர்களின் பிரசங்கம் கேட்டிருக்கிறேன் ப்ரமக்ஞான சபையாரால் துண்டு பிரசுரங்களும் சிறிய புத்தகங்களும் வாசித்தவைகள் என்னிடமிருக் கிறது இச்சபையைப்பற்றி திரு அருட்பிரகாச வள்ளலாரும் அவர் அடிமை தொழுவூர் வேலாயுத முதலியாரும் ப்ரமக்ஞான சபையைப் பற்றி 24—5—45ல் அச்சிட்ட திருவருட்பாவில் சரித்திர உண்மைகள் கூறுகிறது அவர்களின் கருத்து தியாகபில்சுசைட்டி (தத்துவஞான சபை சமர சன்மார்க்கம் என்பதேயாகும்.

6 சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

1922ஆண்டில் வடலூர் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் அங்கத்தினரில் ஒருவராகியும் சுவாமி அவர்களின் சீடர்களின் மருமகனுமானதை வெங்கிட சுப்பிரமணிய பிள்ளை அவர்களை திருப்பரங்குன்றத்திலும் பண்ணிக்குண்டு கிராமத்திலும் சுமார் 10 மாதங்கள் வரை யிருத்தி வைத்து அவர்களின் பிரசங்க அமுதை செவியாறவுண்டேன். அது முதல் திருவருட்பா பாராயண முதலி யனவுண்டு 22—7—53ல் திருவருட்பிரகாச வள்ளலார் பிறந்த ஆண்டுவிழா மதுரை தெற்குமாசி வீதி சித்தவைத்தியக்கல்லூரியில் நடத்திய காலமுதல் அதில் பலவகையாக கூட்டங்களிலும் முக்கிய மானவனாக நடத்திவருவதாகக் கூறுவதும் எனது அருட்குருவின் கிருபையேயாம்.

7 தமிழ்நாடு சித்தவைத்திய சங்கம்

சென்னை மாகாண சித்தவைத்திய சங்கம் கோவில்பட்டி சிவஞான யோகி அவர்களால் ஏற்படுத்தி அதன்மூலம் பனகால் ராஜா முதலமைச்சராகயிருந்தபோதுசித்தவைத்தியர்களுக்கு ரிஜிஸ்ட் ரேஷன் 1933ஆண்டில் 5 வருஷம் தவணையும் பின் ஒரு வருஷம் ஒரு மாதமும் அரசாங்கம் கொடுத்தார்கள் அதற்குள் சித்த ஆயுர் யூனானி கல்லூரிகளும் ஆஸ்பத்திரிகளும் திறந்துவைத்தார்கள் ஷ சங்கத்தின் கிளைச்சங்கம் திருப்புவனத்திலேற்படுத்தி சித்த வைத்தியர் ரிஜிஸ்டர் செய்துகொண்டு வருங்காலத்தில் சிவஞான யோகி அவர்கள் இவ்வுலகம் நீத்தார். அவரால் நடத்திவந்த சங்கத் தின் பணங்களை அவர் மனைவிக்கு பாத்தியமில்லையென கோர்ட்டில் தாவா நடந்தபோது சமாதானம் செய்துவைக்கும்படி சொன்ன பி. டி. ராஜனும், ஆர். எஸ். பதியும் சங்கத்தை உங்களிடம் கொடுக் கிறோம் அவர்களிடம் கொடுக்கமுடியாதென்று சொல்வதை நண்பர் V. P. கந்தசாமி அவர்களிடம் சொல்ல அவர் தமிழ்நாடு சித்த வைத்திய சங்கம் என 15-4-1939ல் ரிஜிஸ்டர்செய்து 23-9-45ல் திருப்பரங்குன்றம் போர்டு ஸ்கூலில் தென்காசி N. அசன்கனி சாய்பு தலைமையில் பொதுக்கூட்டம் ஏற்படுத்தியதில் காரியதரிசி யாக (சித்தயோகி) என்ற பட்டமும் கொடுத்தார்கள்.

8 பாபவிநாசம் தெய்வீக சித்தவைத்திய சங்கம்

திருவுருமாமலை (குருக்குத்துறை) முருகன் பரமானந்தம் என்பவரிடம் பாபவிநாசம் திருக்கண்ணப நாயனுர் மடாலயத்திற்கு போகவேணுமென அங்கு தங்குவதற்கு விஸ்வநாத தேவரிடம் கேட்க அவர் சிவனுத்தேவருக்கு லட்டர் கொடுக்க வாங்கிக் கொண்டுபோக அவரில்லாது யோசித்துக்கொண்டிருக்க பக்கத்தி லுள்ள கிளப்பய்யர் லட்டரைப் பார்த்து சாவியும் மின்சார விளக்கு இருக்கும்படி செய்ய இரவு 9 மணி சுமாருக்கு சினிமாவின் திரை போல் காண்பித்து அதில் 18 சித்தர்கள்வந்து அகஸ்தியர் தலைவராக ஞானபண்டித சித்தவைத்திய விருத்தியாளர் சங்கம் ஏற்படுத்தி அதற்கு வானதீர்த்தம் பாபவிநாசம் தலைமையாக ஏற்படுத்தி 18 சித்தர்களாலும் காரியதரிசியாக நியமித்து (ஞானபண்டிதன்) என திருநாமமிட்டார்கள்.

கிளைச்சங்கம் சித்தவைத்தியசாலை ஏற்படுத்தி நோயாளி களுக்குத் தக்க மருந்துகள் தாம்பிரவர்ணி நதியின் மத்தியிலிருக்கிற பாறைகளில் வைத்து வைத்தியக் குருவாகிய அகத்தியரை நோய் களை தீர்த்துவைக்கும்படி பிரார்த்தித்து மருந்தும் நதியின் தீர்த்தத் தையும் உபயோகிக்கச் செய்யவேண்டுமென்றும் சித்தவைத்தியக் கல்லூரி சித்தர் சாஸ்திர நிலையங்கள் யோக கற்ப சாதன நிலையங் கள் ஏற்படுத்தவேணும் இதுவே நடமாடும் கோயில் திருப்பணி என்று சொல்லி எல்லாம் நடந்தேறி வருமென்று ஆசீர்வதித்தார்கள்.

படமாடுங் கோயிற் பகவற்கொன்றியின்
நடமாடுங் கோயினம் பர்க்கங்காகா
நடமாடுங் கோயினம் பர்க்கொன்றியிற்
படமாடக் கோயிற் பகவற்கதாமே (திருமூலர் 3000)

நங்கடம்பனை பெற்றவள் பங்கினன்
தென்கடம பத்திருக்கரக் கோயிலான்
தன்கடனடி யேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே (அப்பர் தேவாரம்)

சாத்திரகிருபை அந்தக்கரண கிருபை ஈசுவர கிருபை குரு கிருபை பெற்றேம் அருட்குருவின் தெரிசனம் கிடைக்கவேணுமாய் 40வது ஆண்டில் வந்துவேண்டுவன செய்துவைப்பதாகக்கூறியதை மறந்து

அதி ரகசியம் 18

எங்ஙன மறைந்தாயென்னு மெங்கனு நிறைந்தாயெண்ணுந்
திங்களை நோக்குமற்றைச் செங்கதிரோனை நோக்கு
மங்குலைநோக்கும் பின்னும் வரும் வழிகாணேனென்னு
மங்கனுவென்னு மென்பாலா தரவிலையோ வென்னும்

என்புநெக்குருக சதா சிந்தனையுடன் 32 ஆண்டுகளான பின் பாபவிநாசம் குற்ருலம் தென்காசி மருத்துவாழ் மலை தாடகை மலை சென்று பின் புதுக்குளம் பண்ணையார் பங்காவில் வந்திருந்து அவர்களுக்கு வேண்டியவனுயிருக்கும்போது

46 அருட்குரு தெரிசனம்

அருட்குரு சுவாமி அவாகள் இருக்குமிடம் தெரிந்து திருநெல்வேலி புதுக்குளம் பண்ணையார் செட்டிகுளம்பங்களாவிற்கு வந்து பண்ணையாரும்அத்வைதானந்தாவும் உபசரித்துசுவாமிகளிடம் அத்வைதானந்தா செட்டியார் சாமி மதுரையிலிருந்து இன்று வருவா ரென வெளியே போய்வருவதாக யிருவர்களும் போய் திரும்பிவர மாலை 5 மணிக்கு மத்தியில்கண்டு வணங்கிக் கூடவே பங்களாவிற் குப் போசவும் ஊரிருக்குமிடம் முதலானவை கேட்டுக்கொண்டே பண்ணையார் A. சங்கரலிங்கம் பிள்ளையவர்களிடம் இவர் யார் தெரியுமா ஒரு காரணுர்த்தமாய் வந்திருக்கிறுர் (இவர் தகப்பன் வணங்காமுடி வேந்தன் போன்றவர்) சுவாமிக்கு எப்படித்தொண்டு செய்தார் எனக்கேள் என கண்ணீர் தாரை தாரையாக வழிய வாய் குழரி தண்டோம்போல் விழுந்துவிழுந்து வணங்கிக்கொண்டிருக்கும் என்முகம் நோக்கி புலியூர் பாரையின் தென்புரமிருக்கும் ரோடு பாலத்தில் வருவதாகச் சொன்ன பிரகாரம் வந்தேன் எல்லாம் தன் னுலே வந்து சேர்ந்தது எல்லாமறிந்தேன் வேண்டுவன செய்து வைப்பதாகக் கூறி விபூதி பிரசாதம் கொடுத்து அருகிலிருக்கும்படி செய்தார்.

47. அருட்குரு மந்திரம் கொடுத்த விபரம்

மறுநாள் 17—7—47 காலையில் சுவாமி அவர்களுக்கு வென்னீர் ஸ்நானம் செய்வித்து ஆதனமியற்றியதிலமரும்படிசெய்ய நிஷ்டை செய்துகொண்டிருந்தார் தொண்டனுய்நின்றுகொண்டிருக்க ஒரு காகிதத்தில் அருட்குரு மந்திரம் எழுதிக்கொடுத்த: இதைக் காலை மாலை சுமார் அரை மணி நேரம் ஊதுபத்தி பொருத்திவைத்து ஒரு லட்சம் அல்லது மூன்று மண்டலம் செபிக்கவும். ஞான திஷ்டி தூரதிஷ்டிதெரியும் அசரீரி தோன்றும் எனக் கேட்டளவில் தண்டம் போல் விழுந்து வணங்க விபூதி பிரசாதம் கொடுத்து அருட்குரு மந்திரம் எழுதிய காகிதம் கொடுத்து பத்தரமாக வைத்துக்கொள் என்றார். கந்தரலங்காரப் பாடல் 9 வள்ளலார் ஆன்மவிளக்கம் பாடல் 26 முதல் 35 ஞான நிட்டயிலக்கணம் பாடல் 1 முதல் 7 வரையும் கூறுகிறது. அன்று சர்வசித்து வருஷம் ஆடி மாதம் 1ந்தேதி குருவாரம் அமாவாசை.

48. அருட்குரு பரிசோதித்தல்

அருட்குரு மந்திரம் எழுதிக்கொடுத்த காகிதத்தை விபூதிப் பையுடன் வைத்திருக்க வரவழைத்துக்கொண்டு எழுதிக் கொடுத்த காகிதம் கொடுவென மறுநாள் கேட்க வைத்திருந்தது காணுது மனம் துயரமுற்று கண்ணீர்தாரையாக வழியவும் என்முகம் நோக்கி அன்பாலாதரித்துத் திருப்பக்கொடுத்தார். அதைக்கணபதி முருகன் உருவத்தின் கீழமைத்து கண்ணுடிபோட்டு பூசையில் வைத்திருக்கின்றது.

49. கதிர்காம வேலப்பன் நல்லவன் என்றது

அன்றிரவு அருட்குரு சுவாமிகளிடம் கதிர்காம வேலப்பன் (நல்லவன்) உனது சீடன் அவனை பரிசோதிக்கலாகாது (மூன்று) அட்சரம் சொல்லிக்கொடுக்கும்படி (சிபார்சு) செய்தார் அதைச் சொல்கிறேன் என ஆனந்தக் கண்ணீர்பெரு அருட்குருவையும் கதிர்காமவேலப்பனையும் வணங்கினேன்

50. செல்லப் பெருமாளுக்கு உத்தியோகம்

திருநெல்வேலி தண்டியல் சாவடித் தெருவிலிருக்கும் சு. ரா. செல்லப்பெருமாள் B. A. படித்து உத்தியோகம் தேடிக்

கொண்டிருக்கும் நாளில் அவரின் நண்பரான அத்வைதானந்தா அவர்களுடன் (சிங்ககிரி) சிங்கிகுளம் மலையிலிருக்கும் பகவதி அம்மனிடம் திருவருள் பெறவும் அங்குள்ள கோரக்க சித்தரிடம் சித்தர்கணத்துடன் சேர்த்துவைக்கவேணுமாயும் ஒரு மண்டலம் தவமியற்றிவரும்போது செல்லப்பெருமாள் எங்களுக்குவேண்டிய பழம் அவல்கடலை ரவை சீனி காப்பிப்பொடி முதலியன கொண்டு வந்து கொடுப்பார் முனிசிபல் ஆபீசில் கிளார்க்குகள் லீவு கேட்டுப் போன நாளில் அவ்வேலையைப் பார்த்துவந்தார். வேலை பார்த்து வரும்போதும் புதுக்குளம் பண்ணையார் செட்டிகுளம் பங்களாவிற்கு வந்துபோகும் வழக்கப்படி வந்தார் அப்போது பங்களாவின்பின்புறம் மாமரத்தடியிலிருந்தேன் அருட்குரு சுவாமி அவர்கள் முன்புறம் ஈசிச்சேரிலிருக்கார் வாவெனக் கையைப் பிடித்து அடியார்களுக்கு தொண்டுசெய்யும் உனக்கு உத்தியோகமில்லையென்றால் யாருக் கெனச் சொல்லிக்கூட்டிக்கொண்டு வர ஈசிச்சேரிலிருந்த சுவாமி அவர்கள் எதிர்நோக்கிவந்து உத்தியோகம் போட்டாச்சு போகச் சொல்லென அப்போது ரிவினியூ டிபார்ட்மெண்டு வேலை வேணு மென அதற்குத் தந்திவருமென்றார் முனிசிபல் ஆபீசில் காயமா வேலை போட்டதை தெரிவித்து வேலை பார்த்துவரும்போது மேலூரில் ரிவினியூகிளார்க்காக தந்திவந்து வேலைபார்த்து இப்போது கொடைக்கானல் தாலுகா ரிவினியூ இன்ஸ்பெக்டராக இருக்கிறார்.

51. சரபராஜ மாத்திரை வரவழைத்தல்

அருட்குரு சுவாமி அவர்கள் முக்கியமான மருந்து என்ன யிருக்கிறதெனக் கேட்க சரபராஜ மாத்திரை சரக்குகள் 105 சாறு வகை 9 நாள் 45 இரவும் பகலும் அரைத்துவைத்திருக்கிறது அநேக நோய்களுக்கு வெவ்வேறு அனுப்பானத்தில் கொடுக்கலா மென கொடுக்குமுறைகளை ஒரு நோட்டில் விபரமாக எழுதிக் கொண்டு வாவென கொடுக்க சரபராஜ மாத்திரையை எடுத்துவரு கிறேன் என சுவாமி அவர்கள் எடுத்துக்கொண்டேன் என அசைவற்று நிற்க சுவாமி அவர்களின் மருந்துப் பை பண்ணையாரின் பீரோவி லிருந்ததைக் கொண்டுவரச் சொல்லி அதில என் பெட்டிக்குள் ஒரு அவுன்ஸ் பாட்டல் பெயர் ஒட்டிவைத்திருந்ததை எடுத்துவைத்தார். பார்த்த அளவில் மிகவும் மகிழ்ச்சியடைந்து பாக்கியம்பெற்றேன்

என அம்மருந்தால் புகழோங்கும் அநேக நோய்கள் தீருமென்று சொன்னார்கள்.

52. மழைபொழிய வைத்த மாட்சி

அருட்குரு சுவாமி அவர்கள் புதுக்குளத்தில் பண்ணையார் மாமனார் சுப்பையா பிள்ளையிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சுவாமி அவர்களிடம் பண்ணையார் பிள்ளையாரைக் காயப்போட்டார் பிள்ளையார் நெற்பயிருக்குத் தண்ணியில்லாமல் நிலத்தைக் காயப் போட்டார். சாமியார்களுக்குச் சோறுபோட்டாரே இனி எங்கிருந்து போடுவார் என கேட்டளவில் பண்ணையார் மகனை ஆறுமுகம் வண்டி போடச் சொல் பங்களாவிற்குப் போகவேணுமென்று வந்து உன் பாட்டன் சாமியார்களுக்குச் சோறு எங்கிருந்து போடுவார் என்றார் மழையை இந்தப் பாட்டலுக்குள் அடைத்துவைத்திருக்கிறேன் நீயும் மேல்மாடிக்கு வாவென போய் திறந்து உங்கள் நிலமுழுவதுக்கும் விளைவிற்குப் போதுமான மழை பெய்தவுடன் காரக்கை மூடி எடுத்துக்கொள்வேன் என்று சொல்லிய 5 நிமிஷத்திற்குள் கனத்த மழையாக அரைமணி நேரம் பெய்தது 2 கண்மாயும் பெருகி நஞ்சை நிலங்களுக்கு ஒருவாரம் வரை பாய்ச்சவேண்டியதில்லாத நிலமையிலிருந்தது இதனையறிந்த ஆறுமுகம் பிள்ளை ஆச்சரியமுற்று நடந்த தன்மையை பண்ணையாருக்கும் மற்றவர்களுக்கும் கூறவே கேட்டவர்களெல்லாம் சுவாமி அவர்களை வணங்கித் துதித்தார்கள். அப்போது பிறந்திருந்த பெண் மகவிற்கு முத்துக்குமாரம்மாள் என திருநாமம் சூட்டி மகிழ்வுற்றார்கள் புதுக்குளத்திலிருந்த ஆறுமுகம் பிள்ளையும் பாளையங்கோட்டையில் ஒரு லட்சம் பெறுமான மாளிகை வாங்கி முத்துக்குமாரம்மாளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருகிறார்.

53. அங்குமிங்கும் இருந்த அற்புதம்

அருட்குரு சுவாமி அவர்களுடன் பங்களாவில் பகல் ஒரு மணி சுமாருக்குச் சாப்பிடும்போது சுவாமி அவர்கள் ஆ. ஆ. என்று எழுந்து கையலம்பி ஈசிச்சேரில் சாய்ந்துகொண்டிருக்கும்போது சாப்பிட்டபின் போய் நிற்க விசாகப்பட்டணத்தில் தெரிந்தபெரியார் சமாதியாகும்போது சுவாமி யில்லையேயென வந்து சுவாமிதான் சமாதி

வைக்கவேணுமென்ருர். அதனல் எழுந்து வந்தேனென்ருர் இரவ 9 மணிக்கு சமாதிசெய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து அபிஷேகாதிகள் நடக்கிறதென்றும் 10½ மணிக்கு பூஞ்சப்பரத்தில் வைத்து ஊர்வலம் புறப்படுகிறதென்றும் 12 மணிக்கு மேலத்தெரு 2 மணிக்கு வடக்குத்தெரு 4 மணிக்கு கிழக்குத்தெரு ஊர்வலம் வருவதாகச் சொன்ரை அதன்பின் படுத்திருந்த இடத்தில் போய்ப் பார்க்க வெளியே போய்விட்டார் என வழக்கப்படி போகுமிடமெல் லாம் தேடிப் பார்க்கவும் பங்களாவிற்கு வரவும் போகவுமாக குளிக் காமலும் சாப்பிடாமலும் பங்களாவிற்குப் பின்புறமிருக்கும்போது காலே 9 மணி சுமாருக்கு மாங்தோப்புக்குள்ளிருந்துவந்து பெரியாரை விசாகப்பட்டணம்போய் சமாதி செய்துவைத்து குளித்து காபி சாப் பிட்டு வந்தேன் நீ குளித்து சாப்பிடு என மனமகிழ்ச்சியுடன் குளித்து சாப்பிட்டு அங்குள்ளவர்களுக்குத் தெரிவித்திருக்கிறது.

54. சிலோன் தாளேயன் பாவா சந்தேகம் நீக்கியது.

அருட்குரு சுவாமி அவர்கள் வருவதற்குமுன் சிலோன் தாளேயன் பாவா அவர்களுக்கு மருந்து கொடுத்திருந்தேன்சாப்பிட்டு வரும்போது என்நோய் பூராவும் நீங்குமாவென அதற்கு நீங்கும்எனது அருட்குரு பால்குடி பாவா அவர்கள் சீடர் முத்துக்குமாரசாமி வந் திருந்து பழனிக்குபோயிருக்கிருர் வந்தவுடன் அழைத்துவந்து பூரண குணமாகும்படி செய்கிறேன் என அதற்கவர் ரெம்பப் பெரியவாள் வந்த தகவல் தெரிவித்தால் பங்களாவில் வந்து பார்க்கிறேன் என வந்தபின் தகவல் தெரிவித்த மறுநாள் காலே 10 மணிக்கு வருவ தாகச் சொன்னுர் வருவாரென சுவாமி அவர்களிடம் கூற அவரால் இவ்விடம் வந்து பார்க்கமுடியாதென்று சொல்லி 12½ மணிக்கு பதுக்குளம் விருந்துக்குப் போனேம் அவர் 10 மணிமுதல் 2, 3 கார்கள் வரச்செய்தும்புறப்படுவதற்குவந்தகார் 2,3 ஸ்டாட் ஆகாமல் பிற்பகல் 1 மணிக்குமேல் அவ்விடம் வந்து காணுது மனவருத்தத் துடன் திரும்பப்போய்விட்டார் சுவாமி அவர்கள் திருநெல்வேலி போனுர் நான் பங்களாவிற்கு வந்து விபரம் தெரிந்துதிருநெல்வேலி கணேச விலாசத்திற்குபோய் நடந்தவைகூற சுவாமி அவர்கள் நாம் போகவேணுமா என ஒன்றும் பேசாதிருக்க அருளகத்திற்குப் போய்வர யிசைந்தவராய் புறப்பட்டுவர தாளேயன் பாவா அவர் களும் பயபக்தியுடன் மரியாதை செய்து ஏற்பட்டிருந்த நோய்

களைக்கூற உங்களுக்குக் கொடுத்திருக்கும் சாபராச மாத்திரையால் நோய்களும் நீங்கி பூரணகுணமாகுமென அதற்கவர் நோய்நீங்கிப் பூரணகுணம் பெற்றேன் என தெரிவித்தார்.

55. சுந்தரமகாலிங்கம்மறைவாயிருந்தநோய் நீக்கியது

அருட்குருசுவாமி அவர்கள் என் முகம் பார்த்து கருப்புயிருக்கிறது மருந்து சாப்பிட வேணுமென உத்திரவுப்படி நடந்துகொள்வதாகச் சொல்லவும் இன்றிரவு 4 மணிக்கு மருந்துகொடுக்கிறேன் என்றார் அவ்விதம் போக கருப்பட்டிக்குள் வைத்து (வான்மெழுகு) கொடுக்க சாப்பிட்டு அரைமணி நேரத்தில் வாந்தி 4, 5 தடவை 2, 3 படி கபமும் பித்தமுமாக வந்தது 6 மணிவரை அதன்பின் 8 மணிவரை பேதி 10 தடவை 4, 5 படி யிருக்கும் மயங்கி எழுந்திருக்கமுடியாமல் பங்களாவின் வடபக்கம் மணல் குவிந்திருக்கும் மாமரத்தினடியில் படுத்திருக்க சுவாமி அவர்கள் புனற்பாகம் வைக்கச்சொல்லி டம்ளருடன் எழுப்பாது பக்கத்தில்வைத்து வரும்படி செய்ய சுமார் 10 மணிக்கு விழித்துப்பார்த்து கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டுக் களைப்பாறியிருக்கும்போது சுவாமி அவர்கள் வந்து சௌக்கியமா என நோய் பூராவும் போய் சௌக்கியமாகயிருக்கிறேன் என குளித்துச் சாப்பிட வாவெனக் கூட்டிவந்து வென்னீரில் குளிக்கச் செய்வித்து பக்கத்திலிருத்தி சாப்பிடும்படி செய்து கெந்தகச் சுண்ணம் பொட்டணம் 7 தந்து தினம் ஒரு வேளை நெய்யில் சாப்பிடு எல்லா நோயும் போய் சரீரபலத்துடனிருக்குமென்றார். அவ்விதம் சாப்பிட நோய் தீர்ந்து சரீரம் பலத்துடனிருக்கிறது.

56. சங்க நிதியோ பதும நிதியோ

குபேரனிடமிருந்து சங்கநிதி பதுமநிதி உலகிலுள்ளவர்கள் பேராசையுற்று பணம் அதிகம் வேணுமென்று நினைத்தால்அதனளவு சங்கநிதிக்கு வந்து சேரும் தர்மவழியில் பணம் சிலவழிப்பார்களாயின பதுமநிதியின் அளவு குறையும இவ்விரண்டால் பாவ புண்ணியத்திற்கேற்ப உலகத்தாருக்கு வசதிதரும் என்பது பழமை அருட்குரு சுவாமி அவர்களுக்கு யாரேனும் பணம் கொடுப்பார்களாயின் அதை அவர்கள் முன்வைக்கும்படி சொல்வார்கள் போவதற்கு

(ஊம்) என்றவுடனிருக்காது எதுவேணுமானாலும் நினைத்தமாத்திரத்தில் பக்கத்திலிருக்கும் மாருந்தைபோயிருந்தபோது சேதுராமலிங்கம் பிள்ளை சுவாமி அவர்களைப் பழனி விபூதி வேணுமெனக்கேட்க அவரிரண்டுகரங்களையும் விரி என்று பழனியப்பா பிரசாதம் கொடுவென கை நிறைய அபிஷேக விபூதி முதலியன வந்தது.

57. புகைப்படம்

அருட்குரு சுவாமி அவர்களை வணங்கி புகைப்படம் எடுத்து பூசித்துவரவேணுமாய் நினைக்கிறேன் எனது எண்ணத்தை பூர்த்தி செய்யுமாறு கேடடதற்கு (போட்டோவில்) திருவுருவம் படத்தில அமையாது என்னை உள்ளேவை வெளியில்வைக்க விரும்புவதை மறந்துவிடு என்றார் சுத்த தேகம் அமைந்த சுவாமி அவர்களின் திருமேனியும் புகைப்படத்தில் விழுமோ அகண்டாகாரசச்சிதானந்த சொரூபராகிய தெய்வஉருவத்தைச் சிறு படத்தில் அடக்க யாரால் முடியும் உடல் பொருள் ஆவி வாக்கு நோக்கு செயல் எல்லாம் அருட்குருவின் செயல் என உள்ளத்தில் வைத்து பாதசேகரானுக திருவடியில் மாராத் தியானமுற்றிருந்தபோது

58. மாராந்தையில் குருவாயின நிலை

பண்ணிக்குண்டு அய்யாச்சாமி முதலியார் வீட்டிற்கு வந்திருந்த மாருந்தை சுப்பிரமணிய முதலியார் சமீபத்தில் அருட்குருவாய் வந்து உபதேசிப்பார் என்ற பிரகாரம் தானே இல்லத்துக்கு வந்து உபதேசித்தார் அவ்வூரில் (நகரத்தார்) செட்டிச்சாமி என்ற பெரியார் வந்து காசி முதலியார் (தொண்டமண்டலம்) கேசவ முதலியார் கார்காத்தர்கள் சேதுராமலிங்கம்பிள்ளை முதலானவர்களிடம் நன்மாற்கங்களை எடுத்தோதி அடியார்களுக்கு பணி செய்வதே பிறவிப் பயனும் என அறிவித்து வந்தமையால் அவரை தெய்வமாகக் கொண்டாடிவந்தார்கள் முன்னால் அறிவித்த வண்ணம் சமாதியானார் அவ்வூரின் மேல்புரம் சமாதிவைத்து சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து வைத்து ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதம் அஸ்தம்நக்ஷத்திரத்தன்று குருபூசை நடந்தேறி வருகிறது அதற்கு 1940ஆண்டிற்கு முன் முக்கியஸ்தராயிருந்த காசிமுதலியார் அவர்களுக்கு அப்போதிருந்த நோய் நீங்குமாறு மருந்துகொடுத்த காரணத்தால் அங்கு சில

காலம் தங்கியிருக்கும்போது அவர்கள் அடியார் பணிசெய்து வருவதை மதிழ்ந்து வேறு யிடங்களுக்குப்போயும் திரும்பவும் வருவது வழக்கமாகயிருந்தது அருட்குரு சுவாமி அவர்கள் வந்திருப்பதை தெரிந்த அவ்வூரார் சுவாமி அவர்களை அழைத்துப்போக வந்து என்னிடம் கூறவே அவர்களிடம் நல்வார்த்தை கூறி அனுப்பிய பின்னர்சுவாமி அவர்களின்தெரிசனம்கிடைக்கவேணுமாய் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள் சுவாமி அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க மாருங்கை வந்தார் அப்போதுதான் பழனிப்பிரசாதம் சேதுராமலிங்கம் பிள்ளைக்கு கிடைத்தது. அதை எல்லாரும் அணிந்துகொண்டு அடிமைகளாயினர்.

59. அருட்குரு சித்தவைத்தியம் செழிப்புற தொண்டுசெய்யெனக் கட்டளையிடுதல்

6—8—47 இரவு 2 மணி சுமாருக்கு சித்தவைத்தியத்தை அரசாங்கம் கவனிக்காது (சித்த வைத்தியத்திற்கானிவரும்) அதை உன்னால் நிலைநிறுத்தமுடியும் அதற்குத் தொண்டுசெய்யவேணுமென தகுதிகூற முருகனருளால் சித்தவைத்தியம் செழிப்புற்றோங்கும் இப்போதுள்ள ஆங்கில ஆட்சி மாறும் மகாத்மா காந்தியடிகள் திடீரென அமரத்துவமடைவார் உலகில் பல கட்சிகள் தோன்றும் சித்தவைத்தியமும் சமரச சன்மார்க்கமும் உலகிற்கு பயன்தரும் சமீபத்தில் வருகிறேன் வந்து கொல்லிமலைக்குக் கூட்டிப்போய் கணைவிருட்சம் பால்கொடுத்து காயசித்தி செய்துவைக்கிறேன் நாமிருவரும் உலகில் சஞ்சரித்துக்கொண்டிருக்கலாம் சித்தவைத்தியம் எந்நாளுமிருக்க அரசாங்க ஆதரவு பெறவேண்டிய தொண்டுகளை செய் இமயம் முதல் கன்னிவரை தெரியவரும் சித்தனைய் விளங்குவாய் என ஆசீர்வதித்து வால்குடி மாநாடுக்குப்போய்வர ரூ. 25 சிலவுக்கு கொடுத்தார்.

60. அருட்குருவின் கட்டளையின்படி சித்தவைத்தியத் தொண்டுகள்

க) லால்குடியில் சித்தவைத்திய யூனியன்

லால்குடியில் மாநாடு நடத்த முன் சிறை நித்தியானந்த சுவாமி அவர்கள் தலைமையில் 30—3—47 பொதுக்கூட்டம் கூட்டி

யிருந்தார்கள். குறிப்பிட்ட காலத்தில் வராததால் ஈரோடு கிருஷ்ண சாமி நாயுடு அவர்கள் தலைமையில் தமிழ்நாடு சித்தவைத்திய மாநாடு கூட்டுவதாகத் தீர்மானம் செய்தார்கள் அப்போது தமிழ்நாடு சித்த வைத்தியசங்கம் என 15—4—39ல் ரிஜிஸ்டர் 23—9—47 முதல் காரியதரிசியாக யிருக்கிறேன் ஆனதால் அப்பெயர் போடக்கூடா தெனச் சொல்லியும் கேட்கவில்லை அப்போது முன் சிறை சுவாமி வந்தார் வேறு பெயர் வையுங்களென்று சொல்லியும் கேட்கவில்லை அதற்காக தலைவர் காரியதரிசிகளுக்கு ரிஜிஸ்டர் நோட்டீஸ் கொடுத்து இதன் விபரத்தை தென்காசி N. அசன்கனி வழக்கறிஞர் தலைவருக்குத் தெரிவித்திருந்தேன் அருட்குருவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு மாநாடுக்கு 10—8—47ல் போயிருக்க சம்மதம் கேட்டார்கள் அதற்கு தமிழ்நாடு சித்தவைத்திய யூனியன் 12 மாவட்டங்களிலும் 25 மெம்பர் தலைவர் உள்பட நியமிக்கவேணு மென முடியாத காரியமென தலைவர் கூற வந்தவர்கள் பேசாதிருக்க அப்போது அருட்குருவின் கிருபை 2, 3 பெண்களைத் தூண்டிவிட (தாத்தா) சொல்வதுதான் நல்லதாயிருக்குமென தலைவர் பெயர் சொல்லுங்களென தளவாய் திருமலையப்ப முதலியார் என மற்றவர் கள் 24 பேர்கள் சொன்னார்கள் முக்கியமான தீர்மானம் செய்தார்கள் அதனல் சோப்ராக் கமிட்டி சென்னை சித்தவைத்தியக் கல்லூரியி லிருந்து கொண்டு தகவல் கொடுக்க தலைவர் காரியதரிசிகள் போய் சித்தவைத்தியத் தன்மைகளைச் சொன்னார்கள் அப்போதிருந்த சுகாதார மந்திரி T. S. ராஜன் அவர்களும் மருமகன் தோத்தாபுரியும் ஆயுர்வேதத்தால்வந்தது சித்தவைத்தியம்தென்னாட்டிலிருக்கிறதாம் பிரசித்தி யில்லையென எழுதும்படி செய்துவிட்டார்கள் அதுவரை ரிஜிஸ்டர் செய்வதாக வைத்திருந்த மனுக்களையும் தள்ளுபடிசெய்து கட்டிய பணத்தை வாங்கிக்கொள்ளும்படி செய்தார் சித்தவைத்தி யத்தின் தன்மை தெரியாததே காரணமாகும்.

ங) சென்னை மாநாடு நடத்திய தன்மையும் தொண்டும்

சென்னை சித்தவைத்திய சங்கம் காரியதரிசி ரெங்கநாதன் மாநாடுக்கு தலைவர் வேணுமெனக்கேட்க நித்தியானந்தசுவாமியைப் போடுங்கள் நாங்கள் வருகிறோமென எழுத சென்னை சித்தவைத்திய கல்லூரியில் 27—3—48க்கு மாநாடு முதல்நாள் பண்டிட் ஆனந்தம்

வீட்டில் தங்கியிருக்க தலைவரைப்போகாதிருக்கும் காரணம் சொல்லி வைத்தார்கள் அது காரியதரிசிக்குத் தெரிந்து என்னிடம் சொல்ல P. வடிவேல்முதலியார் R. I. M. P. காரியதரிசி எனபோர்டு எழுதிப் போட்டு மாநாடுக்கு வேண்டிய பண உதவியும் இரவில் தூங்காமல் மாநாடு செழிப்புற நடத்துவோமெனக்கூறி தலைவரைக் கூட்டிவந்து மாநாடு நடத்தியதில் முன்னாள் அமைச்சர் முத்தையாமுதலியார் அவர்களும் கனதனவான்களும் பெரியோர்களும் இது சித்தர் திறமை என வாழ்த்தினர்கள் மருந்துக் கண்காட்சியும் முக்கியமான தீர்மானங் களும் நிறைவேறின.

ச) முன்சிறை சித்தவைத்தியக் கல்லூரியும் தொண்டும்

முன்சிறை நித்தியானந்த சுவாமி முன்சிறை மலைமேல் சித்த வைத்தியக் கல்லூரி நடத்தி திருவனந்தபுரம் அரசாங்கம் ஆதரவு கேட்க கொடுக்காததால் சென்னையோடு சேர்ந்துவிட்டதென தெரிந்து சித்தவைத்தியக் கல்லூரி ரிஜிஸ்டர் செய்யவேணுமாய் அப்போதிருந்த முதலமைச்சர் உயர்திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்களிடம் மனுக் கொடுத்திருந்தார் சித்தவைத்தியத்தில் தாளகம் லிங்கம் ரசமுதலான கட்டுகள் உண்டு எங்கள் தாத்தா கூறுவர் அவைகள் இருக்கிறதாவெனக்கேட்க அதை என்னிடம் சொல்ல கட்டுகள் சகிதமாகப் போக கரையாளர் ரசமணி யிருக்காவென இடுப்பில் போட்டிருந்ததை கழற்றிக்கொடுக்க தீய்க்குநிற்குமாவென நிற்குமென்று சொன்னதையெல்லாம் முதலமைச்சரிடம் கூற அவரிசைந்து 28—3—48ல் ரூ. 250, 31—3—48க்குள் கட்ட வேணும் சென்டிரல் போர்டார் பார்த்து ரிஜிஸ்டராகுமென அத் துகையை திருநெல்வேலி வந்து செக் வாங்கி மனுவும் அனுப்பி யும் பார்வைக்கு அவர்கள் வந்தபோது கூடயிருந்தும் ரிஜிஸ்ட்ரா கும்படி செய்தும் பாடத்திட்டம் தயாரித்தும் மாணவர்களிருக்கு மிடமெல்லாம் போய் கூட்டிவந்தும்ஆசிரியர்களுக்கு போதியஆதரவு செய்தும் அடிக்கடி போய் நடந்தேறிவரும்படி செய்தது.

ஞ) மதுரை சித்தவைத்திய சங்கம் மாநாடு

ஷெ மாநாடு 10—7— 48ல் நடந்தது அதில் சித்தர்களின் பெருமையும் சித்தவைத்தியத்தின் தன்மையும் விரிவாக எழுதி

அச்சிட்டு மகாநாட்டில் வாசித்தளவில் கேட்டவர்களெல்லாம் அக மகிழ்ந்து சித்தர்களை வணங்கினர்கள் இவையெல்லாம் அருட்குரு வின் செயல் என அகமகிழ்ந்திருந்தேன்.

ட) தேவி சித்தவைத்தியசாலை

அருட்குரு சுவாமி அவர்கள் தளவாய் திருமலையப்ப முதலியார் தாயார் அண்ணியார் இருக்கும்போது நான் போய் சாப் பிட்டிருக்கிறேன் (காசி முத்துக்குமாரசாமி) நம் மடாலயத்திற்குப் பக்கம் நிலம் தோப்புகளிருக்கிறது என்ருர் 2 மாதத்திற்குள் புதுக் குளம் பண்ணையார் பங்களாவிலிருப்பதாக கேள்வியுற்று வந்து சித்தவைத்தியம் தெரிந்துகொள்ள வாரம் இரு முறைவருவார் அவருக்கு நவசாப நிவர்த்தியும் தேவியின் கிருபைபெற வேண்டிய வைகளும் சொல்லவும் அப்போது திருநெல்வேலியில் தேவிசித்த வைத்தியசாலை என 2—12—48ல் நமது அரண்மனையிலிருந்து நடத்துங்கள் தெரிந்துகொள்வேன் என அவ்வண்ணம் போயிருந்து கைபாகம் செய்பாகம் காட்டி சித்த மருந்துகள் செய்துவந்தார் (சித்தவைத்தியக் கிளினிக்) என்னும் பெயர் வைத்து நடத்தினர்.

ண) சித்தவைத்தியம் தனிக் கலையே

தளவாய் திருமலையப்ப முதலியாருடன் அரண்மனையிலிருக் கும்போது T. S. ராஜனுல் சோப்ரா கமிட்டி எழுதாதை அரசாங்கத் திற்கு தெரிவிக்கவேணுமாய் பலர் சொல்வார்கள் இது அருட்குரு வின் வாக்கென நினைந்து சென்னைமாகாணம் உயர்திரு முதலமைச்சர் (குமாரசாமி ராஜா) அவர்களுக்கு (சித்தவைத்தியம் தனிக்கலையே) என 27—7—49ல் சித்தவைத்திய சரித்திர சான்றுகள் நடைமுறை சான்றுகள் சித்தவைத்தியத்தின் தன்மை எங்கள் திரன் மக்களுக்கு வைசூரி வராமல் தடுப்பது வேண்டுகோள் என்றதாக 1000 ஆயிரம் காப்பிகள் அச்சிட்டு சித்தவைத்திய சங்கத்தார் சித்த வைத்தியர் சித்தவைத்திய அபிமானிகளுக்கும் உடல் பொருள் ஆவியும் சித்த வைத்தியத்திற்கென லட்டரும் டில்லி பிரதமர் சென்னை கவர்னர் முதலானவர்களுக்கும் சென்னை சட்டசபை மெம்பர்கள் டில்லி மேல் சபை மெம்பர்கள் மாவட்டப்போர்டு தலைவர்கள் மெம்பர்கள்திருவாடு துறை ஆதீனம் தருமபுரம் ஆதீனம் முதலானவர்களுக்கும் தினச்

செய்தி எல்லாவற்றிற்கும் அனுப்பியதில் முஸ்லீம் தினச்செய்தியில் கண்டபடி வெளிவந்தது முன்னுள்முதலமைச்சர் உயர்திரு முத்தையா முதலியார் அவர்களும் சென்னை மாகாணத்திலுள்ள அறிஞர்கள்பலர் வாயார வாழ்த்து நன் மதிப்பிட்டு சுமார் 500 லட்டர்கள் வந்தன வந்தவைகளைப்பார்த்து அகமகிழ்ந்தும் அரசாங்கத்திலிருந்து ஆதரவு வரவில்லையே யென மனம் நெகிழ்ந்து வருத்தமுற்றிருக்கும்போது

த) பதிவு செயற்கமிட்டி நியமனமும் சென்டிரல் போர்டார் அங்கீகாரம் பெற்றது.

சென்னை மாகாணச் சித்தவைத்திய சங்கம் என பழனியில் R. M K வேலுச்சாமி பிள்ளை அவர்கள் தலைவராக ரிஜிஸ்டர் செய்து துணைத்தலைவர் கோவிந்தம் பிள்ளை அவர்கள் கும்பகோணத் தில் பதிவு செயற்கமிட்டி ஏற்படுத்தினல் ரூ. 200 சிலவுக்குத் தருவ தாக R. M. K. வேலுச்சாமி பிள்ளை சொன்னராம் சிலவிற்குப் பணம் வாங்காமலே பல சங்கங்களுக்கும் சித்தவைத்தியர்களுக்கும் 31—8—50ல் பொதுக்கூட்டம் ஐக்கிய சங்கத்தின் முலமாகஅழைப் பிதழ் அனுப்பவந்தவர்கள் பதிவுசெயற்கமிட்டித் தலைவர் கோவிந்தம் பிள்ளை அவர்களை யிருக்கவேணுமென அவர் அருட்குருவின் அடிமையை தலைவராக யிருக்கும்படி செய்தார்நிர்வாக மெம்பர்களும் 2 காரியதரிசியும் தேர்ந்தெடுத்தார்கள் அதன் சமீப காலத்தில் சென்ட்ரல்போர்டு மீட்டிங் முதல்நாள் மதுரை P. முத்துக்கருப்ப பிள்ளை அவர்சள் சென்னை போகவேணுமாய் திருநெல்வேலிக்கு கடிதம் எழுதப்போய் மெம்பர்கள் தனித்த கூட்டத்தில்அவர்களிடம் சித்தவைத்தியர்கள் ரிஜிஸ்ட்ரேஷன் மனுக்களை பரிசீலனைசெய்து கொண்டு வரும்படி செய்து ஒவ்வொருவரிடம் ரிஜிஸ்டர் செய்ய வேண்டுவத அவசியமெனச் சொல்லும்படி ஆந்திரா மெம்பர்களுக் கும் தெலுங்கு தெரிந்தவரால் தெரிவிக்க அதன்படி செய்வோம் என மொத்தம் 22 மெம்பர்களில் 17 பேர்கள் ஆமோதித்து சித்தவைத்தி யர்களை ரிஜிஸ்டர் செய்யவேண்டியது அவசியமென தீர்மானம் செய்தார்கள் சென்ட்ரல் போர்டார் டில்லி அரசாங்கச் சுகாதாரமந்திரி அவர்களிடம் தீர்மானத்தை அங்கீகாரம் செய்யவேணுமாய் (டில்லிக்கு) அனுப்பினர்கள் அதை உயர்திரு அமிர்தகௌரி ராஜகுமாரி அவர்கள் சட்டவிரோதமென தள்ளுபடி செய்துவிட்டார் கள் சென்ட்ரல் போர்டார் செய்த தீர்மானத்தை அங்கீகாரம் செய்ய

வேணுமென ஐ கோர்ட்டில் ங்யாயம் கிடைக்க பிராதுபோடவேண்டிய ஏற்பாடுகள் செய்ய ஒற்றுமைக் குறைவால் ங்ன்றுபோனதற்கு என்மனம் துன்புற்று அருட்குருவையும் அகத்தியரையும் ங்னைந்து சாந்தியடைந்தேன்.

ந) அருட்குருவின் தன்மை திரிபுரை தெரிவித்தல்

திருநெல்வேலி டவுன் செங்குன்ற முதலியார் மேலத்தெருவிலிருக்கும் குண்ணத்தூர் கிராம முனிசீபு பெரியசாமி முதலியார் 23—8—51 வந்திருந்தார் அவரிடம் கோவை மாநாட்டில் சரபராஜ மாத்திரையைப்பற்றி பேசவேணுமாய் அழைப்பு வந்திருக்கிறது நாளைச்சாயந்திரம் புறப்படவேணும் ரூ. 50 ஐம்பது கொடுத்தால் வந்துதருகிறேன் என அதற்கவர் வீட்டைப்பூட்டிச் சாவியைக் கொண்டுபோகிறேன் உங்கள் குருவந்து வீட்டைத்திறந்துசிலவுக்கு ரூபாய் கொடுக்கட்டுமென தெற்குச் சுவரில் மாட்டியிருந்த திரிபுரையின் உருவப்படத்திலிருந்து மேற்கு முகமாக உட்கார்ந்திருப்பவரின் கண்ணுக்கு (சோதி) பாட்டரிலை ட்போல் அடிக்க எழுந்து நடுநடுங்கி பலதடவை தெரியாமல் சொன்ன குற்றத்தை மன்னிக்கவேணுமாய் வணங்கினர்.

ப) கோவை மாநாடும் சரபராஜ மாத்திரையின் பெருமையும்

அப்போது பாளையங்கோட்டை எம்.எஸ்.அருணாசலம் வந்து தமிழ்நாடு சித்தவைத்தியசங்கம்பேரால் 15 மருந்துகளடங்கியபெட்டி 2க்கு ரூ. 22 கொடுத்து மகாநாட்டுக்கு வருவதாகக் கூறி மறுநாள் மாலையில் திருநெல்வேலி"ஜங்ஷனுக்கு வந்தார்·25—8—51 அம்மகாநாட்டில் சரபராஜ மாத்திரையின் தன்மை செய்முறை அனுப்பானங்கள் கூற கோபால் பாக் உயர்திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் (ப்ளேட்டில்) எடுக்கும்படி செய்து அதை இங்கிலீஷ் படுத்தி மேல் நாடுகளுக்கு அனுப்ப நோக்கமுள்ளவராயிருந்தார் அம்மகாநாட்டில் (சித்வைத்தியப் பேராசிரியர்) எனப்பட்டங் கொடுத்தார்கள் சரபராஜ சித்தவைத்தியப் பேராசிரியர் அந்த மாத்திரை சித்தவைத்தியத்தின் முதல் மருந்து மாரடப்புவந்து பேசமுடியாமலிருக்குந் தருவாயில் 2. 3 மாத்திரை எதிலாவது கலந்து கொடுத்தால் உயிர்போகாமலிருக்கும்படி செய்து 30 ங்மிஷங்கள் பேசுவார் என சித்தர் பரம்பரையின் வழக்கம்.

ம) சித்தவைத்தியத்திற்கு தனித்தொகுதி வேண்டுமெனல்

தமிழ்நாடு சித்தவைத்திய யூனியன் பொதுக்கூட்டம் கூடும்படி செய்து அருட்குருவின் அடிமை தமிழ்நாடு சித்தவைத்திய சங்கம் காரியதரிசி முதலாக பல சங்கத்தவர்கள் ஆதரவுபெற்று டில்லி பிரதமர் சென்னைக் கவர்னர் அவர்களுக்கும் 10—3—52ல் தனித்தனியாக சித்தவைத்தியத்திற்குத் தனித்தொகுதி கொடுக்க வேணுமென்றும் அதில் சித்தவைத்திய சங்கத்தார்களால் தேர்ந் தெடுப்பவர்களை சென்னை சட்டசபைக்கும் டில்லி சட்டசபைக்கும் அரசாங்கம்ஏற்றுக்கொடுக்கவேணுமென்றும் மனுவும் தீர்மானங்களும் செய்து அனுப்பவந்த விபரம் (12,14. 31–3–52) பதில் தெரிவித்தார் களன்றி தனித்தொகுதி கேட்டதற்கு யாதொரு பதிலுமில்லை சித்தர் களின் சித்தவைத்தியத்திற்குத் தனித்தொகுதி கொடுத்து ஆதரவு செய்வார்களென நம்புகிறேன். அரசாங்கம் சித்தவைத்தியத்தை ஞாபகம்வைக்சவும் காங்கிரஸ் ஆட்சி எந்நாளுமிருக்கவும் சித்தர் களையும் அருட்குருவையும் பன்முறை வணங்குகின்றேன் முன் பாபவிநாசம் சித்தவைத்திய தெய்வீகசங்கம் என்பதையும் 59வது பாராவையும் பார்க்கவேண்டுகிறேன்

ய) சித்தவைத்திய நிலை சித்தர் தெரிவித்தல்

கும்பகோணம் பெரியசாமி முப்பனர் சித்தவைத்தியத்தை அரசாங்கம் அனுமதியாதிருப்பதைப்பற்றி கவலையுடன் படுத்திருக்க அவர் கனவில் ஓர் சித்தர் தோன்றி சித்தவைத்தியத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய ஒருவரிக்கிறார் அவரைப்பார்க்க நேரி டும் எனக்கூறியதாகவும் 1952வரு மே மீ'த்தில் சென்னையில் நடக் கும் மாநாடுக்குப்போகப்பார்க்க ஆவல்கொண்டவராய் வந்து மதுரை P. முத்துக்கருப்பபிள்ளையிடம் விபரமாகக் கூறிக்கேட்க அப்போது அவர் சுவாமி சுந்தரமகாலிங்கம் இவர் தானெனக் காட்டினர் அப்போது அவர்கனவில் கண்டதைக் கூறி விடை பெற்று தன்னிருப்பிடம்போய் கவலையில்லாதிருக்கிறார்

ர) சென்னை மாநாடும் சித்தவைத்தியக் கல்லூரியும்

கோவை மாநாட்டுக்குத் தலைவராகவும் சித்தவைத்தியத் தொகுதி தனியாகயிருக்கவேணுமாய் ஆவல்கொண்டவரான

H. தேவதாஸ் அவர்கள் சென்னை மாநாடுக்கு தலைவராயிருந்தார் அவ்வமயம் தாசர்புரத்தில் சித்தவைத்தியக் கல்லூரி ஏற்படுத்தி அதற்கு வேண்டுவன செய்து வைக்கவேணுமாய் கேட்க இதுவும் அருட்குருவின் கட்டளையென நினைந்து தேவி சித்தவைத்திய சாலையை நடத்திவருவதையும் கவனியாது

ல) தாசர்புரம் சித்தவைத்தியக் கல்லூரியில் பணிசெய்தது

திருநெல்வேலியிலிருந்து சொந்தச் சிலவில் தாசர்புரம் 12—6—52ல் போய் சித்தவைத்தியக் கல்லூரி திறந்துவைக்கும்படி செய்து சித்தவைத்தியத்தின் பாடத்திட்டம் சித்தவைத்தியத்தின் தன்மை பெருமை சித்தர்களின் சரித்திரம் நோயணுகாவிதி முதலியன எழுதி அமுதுவில் பிரசுரிக்கச்செய்து 2வது ஆசிரியராக ஒரு வகுப்பு முடியும்வரை சொந்தச் சிலவிலிருந்து செய்து இவ்விதம் சரியாய் நடத்துங்கள் என்று விடைபெற்று வந்தேன் 12—6—52 முதல் சித்தவைத்தியக்கல்லூரியில் சம்பளம் பெற்றுக்கொண்டதாக கையெழுத்து வாங்கினவர் ரூ. 50 வரை கொடுத்திருக்கலாமென எண்ணுகிறேன்.

வ) மதுரை சித்தவைத்தியக் கல்லூரியில் பணி செய்தது

மதுரை சங்கம் காரியதரிசி P. முத்துக்கருப்ப பிள்ளை சங்கத்தை கூட்டி தலைவராகயிருக்கச் செய்து ஷை சங்கம் சார்பாக சித்தவைத்தியக் கல்லூரி 23—7—53 மதுரை வீரராகவப்பெருமாள் கோவில் சுட்டிடத்தில் திறந்து முதல் ஆசிரியராகயிருந்து நடத்த வேணுமென்று கேட்க ஒப்புக்கொண்டு நடத்திவரும்போது சங்கத்தவர்கள் கவனமில்லாதிருக்க தானே பொறுப்பு எடுத்து நடத்தியும் வரும்போது மற்ற ஆசிரியர்களும் வராமலிருக்க மாணவர்களுக்குப் போதிக்கமுடியாத காரணத்தால் நின்றுவிட்டது ஷை கல்லூரி நடந்து வரும்போது வடலூர் இராமலிங்கசுவாமி அவர்கள் பிறந்த ஆண்டு விழாவை வடக்குமாசி வீதி அருட்பெருஞ்சோதி நிலையம் பொதுக் காரியதரிசி நாகமுத்துசுப்பிரமணியம் நடத்தித் தரவேணுமாய்கேட்க அதன்படி பிறந்த ஆண்டுவிழா நடத்தியது.

ழ) தமிழ்நாடு இந்திய மருந்து உற்பத்திக் கம்பெனி மதுரை

மதுரை P. முத்துக்கருப்ப பிள்ளை அவர்கள் 22—1—54ல் தமிழ்நாடு இந்தியமருந்து உற்பத்திக்கம்பெனியை ஏஜண்டாக யிருக்கும்படி எழுதிக்கொடுத்து 14—2—54ல் மகாசபை கூட்டி ராசினாமா செய்து மானேஜிங் டைரக்டராக பார்த்து வரும்போது சரியாணபடி நடவாமல் 8—6—58ல் அவர் சொற்படி வெ. முத்து அடிகளுக்கு கொடுத்து மானேஜிங்டைரக்டர் நியமனத்தை ராசினாமா செய்திருக்கிறது.

ள) திருப்பரங்குன்றம் சித்தவைத்திய வளர்ச்சி நிலையம்

இது ஒரு தெய்வீக ஸ்தாபனம்

அருட்குரு சுவாமி அவர்களின் கிருபையால் சித்தவைத்தியர்கள் தானேவந்து 1914ம்ஷு முதல் பண்ணிக்குண்டு இல்லத்திலிருந்து சித்தமருந்துகள் கைமுறை செய்முறை தெரிவித்து பல மருந்துகள் செய்து நோயாளிகளுக்கு வேண்டிய மருந்துகள் இனமாக கொடுத்து வரும்போது 1935ல் சதுரகிரி சித்தர் சித்தவைத்தியசாலை எனப்பெயர் வைத்து திருப்பூவனம் ரா. பூ. பிச்சை பிள்ளை மூலமாக பிராஞ்சாக வைத்து மருந்துகளை விற்பனை செய்துவந்தும் 12—4—40 முதல் பாபவிநாசம் அகத்தியர் ஆசிரமத்திலிருந்து நோயாளிகளுக்கு மருந்து கொடுத்துவரும்போது 23—9—45ல் தமிழ்நாடு சித்தவைத்திய சங்கக் காரியதரிசியாகயிருந்து சித்தவைத்தியர்கள் கேட்பதை சொல்லிவைத்தும் 4-12-45ல் பாபவிநாசம் தெய்வீக சித்தவைத்திய சங்கத்தின் கிரமப்படி நடத்தி வந்தும் திருநெல்வேலியில் தேவி சித்தவைத்திய சாலை யெனப் பெயர்வைத்து

1 வந்த உடல் நோய் உள்ள நோய்களைத் தீர்த்தல்
2 என்றும் நோய்வாராமல் காத்தல் வேண்டிய மருந்துகள்
3 சாகாமல் நீண்டநாள் வாழ உடலை நிலைக்கச்செய்தல்
தயார் செய்யவேண்டிய மருந்துகள்

இவைகளுக்கு வேண்டிய மருந்து முதலியவைகள் சித்த வைத்திய விளக்கம் சாகாக்கல்வியின் விளக்கம் இவைகளில்

காரணலாம் உலகமக்களுக்கு தொண்டுசெய்து வந்ததுபோல் 1 காலரா 2 விஷம் 3 வைசூரி 4 சுகப்பிரசவம் இவைகளுக்கு இனமாகக் கொடுத்துவருகிறது.

1) 20 வயதுவரை பெண் பிரவிடையாக 2) 40 வயதுவரை மலடு என்று முடிவுகட்டிய பெண் கெற்பமுண்டாக 3) பூரண கெற்பமாகி சுகப்பிரசவமுண்டாக 4) ஆண் குழந்தை 5) பெண் குழந்தை பிறக்க 6) பெண்களுக்கு ஏற்படும் சூதகக் கோளாறுகள் நீங்க 7) ஆண்களுக்கும் 8) பெண்களுக்கும் கற்பத்தடை 9) பிறந்த குழந்தைகள் ஆயுள்வரை வைசூரி வாராமலிருக்க 10) சரீரம் பெலம்பெற 11) பெருத்த சரீரம் குறைக்க 12) சிறுத்த சரீரம் பெருக்க இன்னும் பலவித மருந்துகளால் நோயுற்றவர்களுக் குத் தக்கமருந்துகளும் கிடைக்கும்படி தொண்டுசெய்து வருகிறது.

ற) தமிழ்நாடு சித்தவைத்திய சங்கம் திருநெல்வேலியில் மாநாடு

இச்சங்கம் 15—4—39ல் திருப்பூவனம் தமிழ்நாடு சித்த வைத்திய சங்கம் என ரிஜிஸ்டர் செய்தது திருப்பூவனம் V. P. கந்தசாமி அவர்கள் காரியதரிசி 23—9—45 முதல் காரியதரிசி (அமைச்சர்) யாராக யிருந்து நடத்தி சித்தவைத்தியர் களுக்கு வேண்டும் தொண்டுகள் செய்துவருகிறது.

1) 23-9-45ல் தலைவர் தென்காசி N.அசன்கனி சாயபு B.A B.L. அவர்கள் வழக்கறிஞர்

2) 27-9-47ல் — திருநெல்வேலி தளவாய் திருமலையப்ப முதலியார் அவர்கள்

3) 19-1-49ல் — திருநெல்வேலி சத்திரம் புதுக்குளம் பண்ணையார் P. சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள்

4) 30-12-49ல் — முன்சிறை நித்தியானந்த சுவாமி அவர்கள்

5) 22-4-51ல் — இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் சங்கரன்கோவில்

ஷை மாநாடு திருநெல்வேலி வீரராகலபுரத்தில் இந்துகல்லூரி ஆங்கில மண்டபத்தில் நடைபெற்றது சுகாதார மந்திரி உயர்திருவாளர் M. மாணிக்கவேலு நாயக்கர் B. A. B. L. அவர்கள் மாநாட்டை தொடங்கிவைத்தார்கள் மதுரை மீனாட்சி மில் உரிமையாளர் உயர்திருவாளர் கருமுத்து தியாராஜ செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்.

பேச்சாளர்கள்: உயர்திரு. V. பலராமையர் B. A. B L. அவர்கள் ஜில்லா மேஜிஸ்திரட்டு திருநெல்வேலி அவ்வமயம் சங்கத் தலைவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 7 தீர்மானங்கள் கொண்டுவர நிறைவேறின முதலமைச்சர் அவர்களும் மற்ற மந்திரிகளும் வாழ்த்தனுப்பினர்கள் இதனுல் சித்தவைத்தியத்திற்கு ஆதரவுசெய்ய அரசாங்கம் முன்வந்துள்ளதென நன்கு விளங்குகிறது.

ண) திருமலைக்குமாரசாமி சித்தவைத்திய ஆராய்ச்சிமன்றம் பண்மொழி

இந்து சமய அறநிலைய ஆணையாளர் உயர்திரு A. உத்தண்டராம பிள்ளை அவர்கள் திருநெல்வேலிக்கு வந்தபோது திருமலைக்குமாரசாமி சித்தவைத்திய ஆராய்ச்சி மன்றம் பண்மொழியில் ஏற்படுத்தவேணுமாய் உயர்திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் V. பலராமையா அவர்களும் சித்தவைத்திய ஆராய்ச்சிமன்றம் விமரிசையாக நடத்த தக்கவர் சுவாமி சுந்தரமகாலிங்கம் இருக்கிருர் என அவர் சம்மதித்து திருமலைக்குமாரசாமி அதற்கு வேண்டிய வசதி செய்யுமாறு உத்திரவிட்டார் தேவஸ்தானத்திற்குத் தெரிவித்து நிறுவும்படிக்கும் அதை இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் அடிமைக்குத் தெரிவிக்க நானும் அவரும் திருநெல்வேலி வந்து ஆபீஸரிடம் தகவல் தெரிவித்து பண்மொழிபோய் வீடு பார்த்து கிரையத்திற்கு வாங்கும்படிக்கும் கிரயம் வாங்கிய பின் ரிப்பேர் செய்யவேணுமாய் தகவல் சொல்லியும் வந்தபின் வேலைகள் எல்லாம் முடியவும் 1—8—58ல் சித்தவைத்திய ஆராய்ச்சிமன்றம் திறந்துவைப்பதற்கு சென்னை மாகாண சுகாதார மந்திரி அவர்களையும் சமய அறநிலைய மந்திரி அவர்களையும் முறையே குற்ருலம்சங்கரன்கோவில்போய் தெரிவிக்க

சம்மதித்தார்கள் 1—8—58 பகல் 15 நாளிகைக்கு சுகாதர மந்திரி உயர் திரு M. A. மாணிக்கவேலு நாயகர் தலைமையில் உயர் திரு M. பக்தவத்ஸலம் அவர்கள் பண் பொழியில் சித்தவைத்திய ஆராய்ச்சிமன்றத்தை தொடங்கிவைத்தார் அவ்வமயம் 4 பேர்கள் பாராட்டுரைகள் வழங்கினார்கள் தலைமை தாங்கிய மந்திரியவர்களை கதிர்காமத்தண்ணல் எனவே அகமகிழ்ந்தேன் அப்போது அருட் குருவின் அடிமையைபேசும்படி செய்தார் V. பலராமையா அவர்கள் அங்கிருந்தவர்களுக்கு அறிமுகப்படுத்தினர் 6—8—47ல் அருட்குரு வின் வாக்குப்படி நிறைவேற்ற முருகன் முன்னின்றார் இ. மு. சு. பல ராமையா பின்னின்றார்கள் நீங்கள்எல்லோரும்சூழவந்தீர்கள் என்றேன் அன்று குற்றாலத்தில் உயர் திரு A. உத்தண்டராமபிள்ளை அவர்கள் சித்தவைத்தியஆராச்சி மன்றத்தை தங்களை நம்பி விட்டிருக்கிறேன் என முருகன் முன்னின்று நடத்துவார் எனக்கூறி அப்பணியை ஏற்று நடத்துவதாக அது முதல் நோய்களுக்கு தக்கமருத்து கள் தயாரித்து கொண்டுவந்ததை வைத்து தலைமை சித்தமருந்து வராக நடத்திவரும்போது சித்தர் நூலாராச்சி மருந்துகள் ஆராய்ச்சி பழய ஒலைச்சுவடிகள் அச்சிடவேணுமென சொல்ல பின் பார்க் கலாமென்று சொன்னார்கள் சித்த மருந்துகளின் கிரையம் கொடுத் ததை பெரிதென எண்ணி வாங்கிக்கொண்டு வந்தது.

61. அரசாங்கம் உண்மையுணர்தல்

திருநெல்வேலி மாநாடுக்கும் சித்தவைத்திய ஆராச்சிமன் றத்திற்கும் வந்திருந்த சுகாதார மந்திரி அவர்கள் 20—8—58-ல் 1—9—58 முதல் சித்தவைத்தியர்களை ரிஜிஸ்டர் செய்துகொள்ளும் படி கெசட்டில் பிரசுரமானது மனுப்போட்டவர்களை சென்னைக்கு வரும்படி செய்து 15—9—60-ல் பரிசீலனை செய்து சர்டிபை கொடுப்பதாக பீஸ் ரூ. 16½யும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் இவ்விதம் செய்வதால் சித்தவைத்திய பரம்பரையாளர்கள் சித்த வைத்தியர்களாக ஆவதற்கு 1933-ம் ஆண்டின் விதிப்படி திருத்தி அமைத்து தமிழ் நாடு சித்தவைத்தியசங்கத்தவர்களை வரவழைத்து அவர்களுடன் பரிசீலனை செய்யுமாறு காங்கிரஸ் அரசாங்கம் செய்ய வேணுமென்றும் 6—8—47-ல் அருட்குரு சித்தவைத்தியம் செழும் புற தொண்டு செய்யனக்கட்டளையிட்டது பூர்த்தியானதாக அன் னாரின் பொன்னன சீர்பாதங்களை வணங்கித்துதிக்கின்றேன்.

ஏறுவது கண் செவி மூக்கு நாக்கு நெஞ்சமிரண்டு
கூறு செய்தந்தரங்கத்தே நமது குருவெனவே
தேறுவதாதியு மந்த முந்தாங்கிச்சிவாகமவா
யாறுதலம் வரை யாரையும் பார்ப்ப திவ்வாறெழுத்தே

வையஞ்சலமங்கி கால்வான் பலவுயிர் வான் முடியோ
டெய்யும் பரமுதற் சார்வதெல்லாம் எம்பிரான் முருகா
தெய்யென நின்று நின்ருட் சிலம்பொலியோசைத்திருவிளையாட்
டைய நின்னங்கம தென்னங்கமாய் நின்றவானந்தமே

என்ற நிலையில் அருட்குருவை துதித்தபின்னர் அவரின் தன்மையொத்த செயல்களின் விளக்கம் பின்வரும் 62. 63-ல் வரும்.

62. ஞானநிட்டையின் பெருமை

தானென்ற ஞானத்தின் பெருமை கேளு
தலைகீழாய் பஞ்சாக்கினியிடை யில்நின்று
கோனென்ற கோடி கற்பந்தவஞ் செய்பலமும்
கூறும் அசுவமேதயாகம் நூறுகோடி
தேனென்ற செய்பலமு மூவருக்குச்
செகந்தனிலே நூறுகற்பம் அர்ச்சித்தபலமும்
ஊனென்ற ஞானநிட்டை செய்தபலத்துக்கு
ஒவ்வாது யென்றுமறை யுரைக்குங்கேளே

உண்ணப்பா ஞானநிட்டையில்லாமூடர்
ஓ கோ கோ காயசித்தியானுலென்ன
பெண்ணப்பாகாண் கயிலே மனந்தான்பத்தும்
பிரியமாய் சையோகம் செய்வான்பாவி
கண்ணப்பாமளுங்கிப்போம் சடம் விரிந்துபோகும்
காலனி தவென்றறியாக் கழுதைமாண்பர்
விண்ணப்பா காய சித்தியோக சித்தி
விழலாய்ப்போய் உலகத்திற்கடையாவாளே

63. ஞானலிஙனசை கற்றவர் திறம்

திறமான விஞ்சை கற்றோர் பெருமைதன்னை
செப்புகிறோம் இன்னமுமே சுருக்கமாக
அறமான தர்மத்தில் நாட்டம் வைத்துச்செய்வார்
அன்புடைய பேர்கள் வந்தால் அவர்க்கிரக்கம்புரிவார்
மவுனியோரைக் காணில்அவரை வணக்கம் செய்வார்
மலமாய்கையற்றவர்கள் சிநேகிதமே புரிவார்
திறமான விஞ்சைகள் தான் சதா காலம் செபிப்பார்
திவ்யமாம் சிதம்பா அட்டாச்சாம் கற்றவரே

கற்றவர்கள் ரெம்பவுண்டு உலகிலே தான்
காணார்கள் ஒருவருக்கும் காட்டார் தன்னை
குற்றமற்ற புண்ணியர்களில்லஞ் சென்று
குறைவின்றி போசனங்கள் அறுசுவைகளுடனே
உத்தமமாய் உண்டு நித்திரை மெத்தைமீதினில்
உறங்கியுமே விளித்ததின்பின் உத்தமனுமாக
சுத்த முள்ள மனைக்குரியாருடன் சொல்லிக்கொண்டே
சூட்சமாய் பறந்தோடுங்கெவுனமுன்னுவாரே

உன்னுவரே மேருயுச்சி துருவனுக்குமேலே
உரைப்பாக அரைக்கணத்தில் அண்ட மெல்லாஞ்சூழப்
பண்ணுவரே பகராியபாரி சாதமலரைப்
பறக்கயிலும்மா ராமலெடுத்துவைத்துக்கொள்வார்
மின்னுருவங்கொண்டு மாருதவேகங்கொள்வார்
மேருகிரி சூழ் ஏழுசாகர முந்தாண்டிடுவார்
மன்றுலவும் வாசியமு துண்டுமேதான்
மானிலத்தில் அட்டசித்தும் ஆடுவாரே

சித்து வகுப்பு

அடல் புனைந்தவேலுமயிலும் என்றும் வாழி
அரிய தொன்று கூற அருகிருந்துகேண்மின்
அளவில் பலகாய மோடாடியண்டர்
அறிய விளையாடலா மூலி ஒன்றில்

ஆசைவேறிலே அறு முகவன் திரு
ஆணைமேருவை அடி தலைகண்டனம்
அகிலலோகமும் அடைடவடைவே முதல்
அருளினேம் அது சிவனறியாதல்ல
அமையும்படி நின்றமனோரதம்
ஆவை முழுநுந்தருவம் பதராதுகொள்
ஆதியு முடிவுமிலா நந்தந்தரும்
ஆறிருகர தல நாதன் தந்தவை

இந்நூல் 10 பால்குடிபாவா தரிசனக்காட்சி 17 சுட்டதுளை அடைத்தல் 53 அங்குமிங்கும் இருந்த அற்புதம் இவைகள் கவனிக்கத்தக்கது

64 பிறந்த ஆண்டுவிழா நடந்துவரும் வைபவம்

சித்தவைத்தியவளர்ச்சி நிலையத்தில் தமிழ்நாடு சித்த வைத்திய சங்கத்தவர்களாலும் வடலூர் சமரச சன்மார்க்க மெய்யன்பர்களாலும் நடத்தியும் திருநெல்வேலி திருவாடுதுறை ஆதீனம் குருக்கத்துறைமேலக்கோவில் சுப்பிரமணியசுவாமி சந்நிதியில் 133-வது ஆண்டு விழா 10—4—60-ல் தவத்திரு ஏழை அமாவாசைப் பரதேசி அவர்கள் கொடி உயர்த்தினர்பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர்கள் ஒவ்வொரு ஆண்டுவிழாவும் பங்குனி உத்திரத்திருநாளன்று முற்பகல் 10 மணி முதலும் சங்கத்தின் நிர்வாகத்தேர்தல் முதலியன பிற்பகல் 2 மணி முதலும் நடந்துவரும்

65. அருட்குரு சரித்திர சிரவணபலன்

சுவாமி தெய்வத்தன்மை திருஅவதாரம் பிறந்தகாலம் தொட்டு நடந்து வந்த சிறப்பும் குருவால் பெற்ற அருளும் தொண்டும் யாவராலும் செய்ய முடியாத பெரிய காரியங்களாம் இம்மகான் முருகன் அவதாரம் என்ற திவ்ய செய்கைகள் நிறைந்தனவென்பதும் தவசிரேஷ்டர் தத்துவ ஞானி என்பதும் கலியுகத்தில் ஓர் ஞானசித்தர் என நன்குவிளங்கும்

யோகம் ஞானம்

லயற்ற இடமல்லோ பிரமக்ஞானம்
ிதிப்பா லுண்டதல்லோ காய கற்பம்
னமிட்டுப்பாய்வதல்லோ குளிகை மாற்கம்
ணபதியைக்காண்பதல்லோ தீட்சைமூலம்
வனுடைய உப்பறிந்தாலவேதையோட்டம்
கம் அழியாது இருந்தால் யோகம் ஞானம்
வனவிளையாட்டல்லோ சித்தராட்டம்
ரண்த்தைக்கண்டவரைப் பூசைபண்ணே கூர்மானந்தர் 50

முன்னர் வடபாதிமங்கலத்தில் தெய்வத்தன்மை திருவுருக் ாண்டெழுந்தருளியவண்ணமே சடமுத்திபெற்று காசிரிஷிகேசம் ர்காமம் இவைகளிற்சஞ்சரித்து வாழ்கிருர் எக்காலமும் இவ்வண் மே நிகழ்வார்.

திருமூவர் உபதேசம்

ூரியகாந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரியகாந்தஞ் சூழ்பஞ்சைச்சுட மாட்டா
சூரியன் சந்நிதியிற்சுடுமாறு போல்
ஆரியன்றேற்ற முனற்றமலங்களே

ஞான குரு தெரிசனம் 4

டனுருவங் கருதுவளவிற்
விடந்தீர்ந்து பயங்கெடுமாபோல்
ங்கினுருவங்குறித்தவப்போதே
ரிமலந்தீர்ந்து சிவனவனுமே

இத்தன்மை சிறப்புவாய்ந்த ஞான சித்தர் சரித்திரத்தை த்தவர்கள் கேட்டவர்கள் பூசித்துவருபவர்களுக்கு ஏற்படும் ன்கள்.

தினம்: சிசு நசித்தல் முதலானபாவங்களும் துட்டதேவதை களாலும் சத்துருக்காளாலும் ஏற்படும் பில்லி சூனியம் முத லானவைகளும் சயம்காசம் குன்மம் குஷ்டம் வெண் குஷ்டம் முதலானவைகளும் நீங்கும்

2. குருவாரம் குருவே தெய்வம் குருவே மும்மூர்த்திகள் குருவின் வாக்கியமே மந்திரம் முக்தி மூலம் குருகிருபை எனத் தியானத் துடனிருக்கில் முக்தி கிடைக்கும்.

3 உத்திர நட்சத்திரம் எல்லாவிதமான ஆபத்துகளும் வராமல் தடுக்கும் வந்த ஆபத்துகளும் நீங்கும்.

4 மூல நட்சத்திரம் புத்திரப்பேறுண்டாகும்.

5 ஆண்டுவிழா நடத்தியும் வாசித்தால் எல்லாவிதமான ஐஸ்வர் யங்களும் உண்டாகும் எனக்கறிவித்த வண்ணமே தெரிவித்தி ருக்கிறது.

எல்லோருமின்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே

(நூல் சம்பூரணம்)

முடிவுரை

கற்றவர் போற்றுங் கதிர்காம வேலப்பன்
பற்றுடன் பால்குடிபாவாவை—கொற்றடிமை
கொண்டதுபோல் முத்துக்குமாரசாமி யெனை
தொண்டனுய்க் கொண்டான் தொடர்ந்து

அருட்குருவின் சரிதம் அவனருளால் அறிவித்த வண்ணமே, பூர்த்தியானதாக எண்ணக்கடவர்கள்

வாழ்க கதிர்காம வேலப்பனும்
வாழ்க அவனருள்பால்குடி பாவாவும்
வாழ்க குரு முத்துக்குமாரசாமியும்
வாழ்க அவன் அடியவர் நாளுமே

வேலுமயிலுந் துணை.